வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P . 1632 விலை ரூ. 30/=

மட்டு. ஈழநாடு
Eelanadu

Email : news@eelanadu.lk மலர் : 04 12.12.2022 திங்கட்கிழமை இதழ் : 04 பக்கங்கள் : 16




# உள்ளூராட்சி தேர்தலை கூட்டமைப்பு கட்சிகள் தனியாக சந்திக்கத் திட்டம்!

## தமிழரசின் மத்திய குழுவில் ஆராய்வு

வவுனியா, டிசெ. 12

உள்ளூராட்சி தேர்தலில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் கட்சிகள் தனித்தனியாக முகம் கொடுப்பது தொடர்பில் தொழில்நுட்ப ரீதியில் சாதக மாக ஆராயப்பட்டுள்ளது என தமிழ் தேசிய கூட்டமைப்பின் ஊடக பேச்சாளரும் பாராளு மன்ற உறுப்பினருமான எம். ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

தமிழரசுக் கட்சியின் மத்திய குழு கூட்டம் நேற்று வவுனியா குடியிருப்பு பிரதேச கலாசார மண்டபத்தில் மாவை சேனாதி ராசா தலைமையில் நடைபெற் றது. இதன், பின்னர் ஊடகங் களுக்கு கருத்து கூறும்போதே அவர் இவ்வாறு தெரிவித் தார்.

மேலும், இந்தக் கூட்டத் தில், தற்போது ஆரம்பமாக வுள்ளதாக கூறப்படும் அர சமைப்பு விடயங்கள், கட்சி யின் நிலைப்பாடு தொடர்பில் ஆரா யப்பட்டன. அத்துடன் உள்ளூராட்சி மன்ற வட்டார எல்லைகள் மாற்றி அமைக் கப்பட்டமை தொடர் பாகவும் ஆராயப்பட் டது. 15

உள்ளூராட்சி சபை தேர்தல்:

# பிற்போட பஸில் திட்டம் இடம் கொடுக்காத சட்டம்!

- *எல்லை நிர்ணய சட்டம் மூலமாக 6 மாதங்களே பிற்போட முடியுமாம்!*

கொழும்பு, டிசெம்பர் 12

**உள்ளூராட்சி சபைத் தேர்தலை ஒத்திவைப்பதற்கு பொதுஜன பெரமுன கட்சியின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ஷ விரும்பிய போதும் சட்டம் அதற்கு இடம் கொடுக்கவில்லை கொழும்பின் அரசியல் உயர் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.**

பொதுஜன பெரமுன கட்சியின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜ பக்ஷ நடத்திய இரகசிய கருத்துக் கணிப்பின் முடிவின் பின்னர், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பஸில் ராஜபக்ஷ வஜிர அபேவர்த் தன மற்றும் பலர் இரகசிய கலந் துரையாடல் ஒன்றில் ஈடுபட்டனர்.

இந்தக் கலந்துரையாடலில் உள்ளூராட்சி சபை தேர்தலை ஒரு வருடத்துக்கு ஒத்திவைப்பது தொடர்பில் ஆலோசிக்கப்பட்டது. இது தொடர்பில் சட்ட ஆலோசனையை பெறவும் நடவடிக்கை எடுக்கப்பட் 15

## உள்ளூராட்சி சபை தேர்தல் ஜே. வி. பியும் பின்னடிக்கிறது!

கொழும்பு, டிசெ. 12

உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கு பொதுஜன பெரமுன மட்டுமின்றி ஜே. வி. பியும் முகங் கொடுக்க விரும்ப வில்லை என்று அந்தக் கட்சியின் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

எனவே, உள்ளூராட்சி தேர்தலை ஒத்திவைக்க வேண்டும் என்ற நிலைப் பாட்டுடன் இந்த இரு கட்சிகளும் உள்ளன. இரகசிய கருத்துக் கணிப் பில் ஜே. வி. பி. இரண்டாவது இடத்தில் இருக் 15

## பாலியல் சார்ந்த தேடல்: இலங்கையே முதலிடம்!

### நாட்டில் வடக்கு இரண்டாமிடம்

கொழும்பு, டிசெ. 12

கூகுள் தேடு பொறியில் பாலியல் சார்ந்த சொல் களை தேடியதில் இலங்கை மீண்டும் முதலிடத்தைப் பிடித்துள்ளது.

இதேசமயம், இலங்கையில் பாலியல் சார் சொல் களை தேடியதில் வடக்கு மாகாணம் இரண்டாவது இடத்திலும் கிழக்கு மாகாணம் நான்காவது இடத்திலும் உள்ளன.

கூகுள் தேடு பொறியில் இந்த ஆண்டு 15

## ஒற்றையாட்சிக்குள் அதிகார பகிர்வு இதுவே இனப் பிரச்னைக்கான தீர்வு

### சஜித் பிரேமதாஸ அறிவிப்பு

கொழும்பு, டிசெ. 12

ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கத்தில் ஒற்றை யாட்சிக்குள் அனைத்து இன மக்களும் ஒன்றாக வாழக்கூடிய அதிகார பகிர்வை ஏற்படுத்து வோம் என்று எதிர்க்கட் சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலை வருமான சஜித் பிரேம தாஸ தெரிவித் தார்.

ஐக்கிய மக்கள் 15

இனப் பிரச்னை தீர்வுக்கான பேச்சு:

## முதலாவது சந்திப்பு நாளை; முன்னணி பங்கேற்காது!

யாழ்ப்பாணம், டிசெ. 12

தேசிய இனப் பிரச்னைக்கு அரசியல் தீர்வு காண்பதற் காக நடைபெறவுள்ள பேச்சுக்கான சந்திப்பு நாளை செவ் வாய்க்கிழமை நடைபெறவுள்ளது. இதில், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தவிர்ந்த அழைப்பு விடுக்கப்பட்ட ஏனைய தமிழ் கட்சிகள் பங்கேற் 15

## அரசுடனான பேச்சில் இந்திய மத்தியஸ்தம்!

### நாளைய சந்திப்பில் வலியுறுத்துமாறு கட்சிகளை கேட்கிறார் விக்னேஸ்வரன்!

யாழ்ப்பாணம், டிசெ. 12

பேச்சு மூலமான தீர் வில் ஜனாதிபதி உண்மை யான அக்கறையுடன் இருப்பாரானால், இந்திய மத்தியஸ்தத்துடன் பேச்சை ஆரம்பிப்பதற்கு அவர் இணங்கவேண்டும். இதனை நான் நாளைய சந்திப்பில் வலியுறுத்து வேன். இந்த பேச்சில் ஏனைய எல்லா தமிழ் அரசியல் கட்சிகளும் ஒரு 15

## பாடசாலைகள் இன்று வழமைக்கு!

கொழும்பு, டிசெ. 12

நாட்டின் அனைத்து அரச மற்றும் அரச அனு சரணை பெற்ற பாட சாலைகளும் இன்று திறக் கப்படும் என்று அறிவிக் கப்பட்டுள்ளது.

சீரற்ற கால நிலை காரணமாக கடந்த வெள்ளிக் 15

## யாழ்ப்பாணம் – சென்னை இடையே விமான சேவைகள் இன்று ஆரம்பம்!

யாழ்ப்பாணம், டிசெ. 12

மூன்று வருடங்களுக்கு பின்னர் யாழ்ப்பாணம் - சென்னை இடையே விமான சேவைகள் இன்று திங்கட் கிழமை முதல் ஆரம்பமாகவுள்ளன என்று துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சு தெரிவித் துள்ளது.

இதன்படி, சென்னை விமான நிலை யத்தில் இருந்து பயணிகளை ஏற்றி வரும் விமானம் இன்று திங்கட்கிழமை முற் பகல் 10: 50 மணியளவில் யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தை வந்தடை யும் என்று யாழ்ப்பாணம் சர்வ தேச விமான நிலைய செயல் பாட்டு முகாமையாளர் லக்ஷ்மன் 15

## புலிகள் எதிர்பார்த்த சூழல் இதுதான் பொறுப்புடன் செயல்பட வேண்டும்!

### தமிழர் பிரதிநிதிகளிடம் கூறுகிறார் கஜேந்திரகுமார்

யாழ்ப்பாணம், டிசெ. 12

விடுதலைப் புலிகள் எதிர்பார்த்த சூழல் இப்போது தான் அமைந்துள்ளது. இந்த காலப்பகுதியில் தமிழ் மக்கள் பிரதிநிதிகள் பொறுப்புடன் செயல் பட வேண்டும் என்று கூறியுள்ளார் தமிழ் தேசிய 15

## இப்படியும் நடக்கிறது...!

லண்டனிலிருந்து நண்பர் ஒருவரிடமிருந்து வட்ஸ் அப்பில் ஒரு செய்தி வந்தது. அது ஓர் ஓடியோ பதிவு. போட்டுக்கேட்டபோது அதில் ஒருவர் புலம்பெயர் தமிழர்களிடம் அழைப்பு விடுத்து அந்தச் செய்தியை அனுப்பியிருந்தது தெரிந்தது.

செய்தியை அனுப்பியவர் ஒரு 'முன்னாள் போராளி' என்பது தெரிந்தது.

போராளிகள் நலன்புரி சங்கத்தை ஆரம்பித்திருக்கிறோம் என்ற தகவலுடன்தான் அவர் அந்தச் செய்தியை சொல்ல வருகின்றார்.

இங்கே இந்த முன்னாள் போராளிகள் என்ற சொல் பதத்திலேயே இந்த ஊர்க்குருவிக்கு நெருடல் உண்டு.

போராளி என்றால் அவன் வாழ்நாள் முழுக்க ஒரு போராளிதான். அதில் முன்னாள், இந்நாள் போராளி என்பது அந்த போராளி என்ற பதத்தையே நெருடலுக்கு உள்ளாக்கிவிடுகின்றது.

தங்களை தாங்களே முன்னாள் போராளிகள் என்பது அவர்கள் இப்போது போராளிகள் அல்ல என்ற அர்த்தத்தை கொடுத்துவிடுகின்றது. ஓர் இலட்சியத்தாடு போராடிய ஒருவர் அந்த இலட்சியத்தை அடையும்வரை போராடிக்கொண்டுதான் இருக்கவேண்டும். அதன் வடிவங்களில் மாற்றங்கள் வரலாம். ஆனால், போராட்டம் - போராளி என்பதில் மாற்றம் வந்துவிடமுடியாது.

இதுபற்றிப் பிறிதொரு நாளில் விளக்கமாகப் பார்ப்போம். ஆனால், அந்த ஓடியோ பதிவில் விடுக்கப்பட்ட கோரிக்கை குறித்தே இந்தப் பத்தியில் பேசவேண்டியிருக்கின்றது.

வவுனியாவுக்கு கொழும்பிலிருந்து வந்த அதிகாரிகள் வவுனியா நகர சபையின் எல்லைகளைக் குறைப்பது தொடர்பாக இரகசிய ஆய்வுகளை நடத்திச் சென்றிருக்கின்றனர் என்றும் இப்போது வடக்கின் உள்ளூராட்சி உறுப்பினர்களை கொழும்புக்கு அழைக்கப்பட்டுள்ளனர், அவர்களுடனும் உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்களை குறைப்பது தொடர்பாக பேசப்பட்டுள்ளது என்று தான் அறிந்தார் எனவும், அதுமாத்திரமன்றி மகிந்த, மைத்திரி, ரணில் ஆகியோர் மாவட்ட அபிவிருத்தி சபைகள் தொடர்பாகப் பேசிக்கொண்டிருக்கின்றனர். அதற்கு அமெரிக்காவும் இந்தியாவும் அழுத்தம் கொடுத்துக்கொண்டிருக்கின்றன என்றும் அவர் அறிந்தாராம். அதேவேளை, இந்தியாவும் தமிழ் கட்சிகளை அரசாங்கம் பேச்சுக்கு அழைக்கும்போது அவர்களை அதில் கலந்துகொள்ளுமாறு அழுத்தம் கொடுப்பதாகவும் அவர் அறிந்தாராம்.

இப்படியொரு தகவலை இங்கிருந்து ஒரு 'முன்னாள் போராளி' கோரிக்கையாக விடுக்க அதனை அங்கே ஒரு கூட்டம் பகிர்ந்து கொண்டிருக்கின்றது.

முதலில் நாட்டில் என்ன நடக்கின்றது என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும். நாட்டிலுள்ள சில நகர சபைகளை மாநகர சபைகளாகத் தரமுயர்த்த சம்பந்தப்பட்ட அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது. அவ்வாறு தரம் உயர்த்தப்படவிருக்கும் நகர சபைகளில் வவுனியா நகர சபையும் ஒன்று. அதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுவிட்டன.

அதேவேளை, இப்போது இருக்கும் உள்ளூராட்சி உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கை எட்டாயிரம் என்பதை நான்காயிரமாக குறைப்பதற்கான ஏற்பாடுகள் நடந்து அவற்றின் எல்லைகளை மாற்றியமைப்பதற்ககாவே முன்னாள் தேர்தல் ஆணையர் மகிந்த தேசப்பிரிய தலைமையில் குழு ஒன்றும் நியமிக்கப்பட்டுள்ளது. இவர்கள் நாடு முழுவதிலுமுள்ள உள்ளூராட்சி சபை வட்டாரங்களின் எல்லைகளை மாற்றியமைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர். அதற்காகவே வடக்கிலுள்ள உள்ளூராட்சி சபை உறுப்பினர்களை கொழும்புக்கு அழைத்திருந்தாலும் அதற்காக தமிழர்கள் ஏன் அச்சமடையவேண்டும் என்பது தெரியவில்லை.

இது வவுனியா தமிழ் பிரதேச சபையையும் சிங்கள பிரதேச சபையையும் இணைக்கின்ற முயற்சி அல்ல. இருக்கின்ற சபைகளின் வட்டாரங்களை குறைக்கின்ற பணிதான்.

இந்த சாதாரண விடயத்தை ஏதோ இரகசிய தகவல் தனக்கு மட்டும் கிடைத்ததுபோலவும், தமிழர்களுக்கு பாரிய பாதிப்பு ஏற்படப்போவது போலவும் எச்சரிக்கை விடுப்பது எந்த வகையிலும் தமிழ் மக்களுக்கு உதவப்போவதில்லை.

மாவட்ட அபிவிருத்தி சபைகள் அல்ல, மாவட்ட அபிவிருத்தி குழுக்கள் பற்றிய முழுமையான விளக்கம் ஜனாதிபதி தரப்பில் கொடுக்கப்பட்டுவிட்டது. உள்ளூராட்சி சபைகள், மாகாண சபைகளுக்கு இடையே தற்போதிருக்கும் மாவட்ட அிவிருத்தி குழுக்களை எப்படி இந்த உள்ளூராட்சி சபைகளுடனும் மாகாண சபைகளுடனும் ஒன்றுக்கொன்று பயனுள்ள வகையில் இயங்கப் பண்ணுவது என்று சிந்திப்பதை விடுத்து, தமிழ் மக்களுக்கு மாவட்ட அபிவிருத்தி சபைகளையே தீர்வாக தர முயற்சி செய்கிறார்கள் என்ற கற்பனாவாதக் கதைகளை அவிழ்த்துவிடுவதாலும் எந்த பயனையும் தமிழ் மக்கள் அடைந்துவிடப்போவதில்லை.

இனப் பிரச்னையை தீர்த்துவைக்க பேச்சுக்களை நடத்தவிருப்பதாக ஜனாதிபதி அறிவித்திருக்கின்றார். அதற்காக அனைத்துக் கட்சிக் கூட்டத்தை கூட்டியிருக்கிறார். அந்த பேச்சுகளுக்கு நிபந்தனை விதித்துக்கொண்டு அதில் கலந்துகொள்ள மறுப்பது புத்திசாலித்தனமானதல்ல என்பதை அனுபவமுள்ள நமது தலைவர்கள் அறியாமலிருக்க மாட்டார்கள்.

பேச்சு தொடர்பாக ஆய்வாளர் நிலாந்தன் ஒரு கட்டுரையில் எழுதியிருப்பது இந்த ஊக்குருவியின் கவனத்தைப் பெற்றது.

'இன்றைய அரசியல் சூழலில் பேச்சுகளை நிராகரிப்பதைவிடவும் பேச்சுகளிகளில் இறங்கி அவற்றை அம்பலப்படுத்துவதுதான் அனைத்துலக சமூகத்தின் மத்தியில் தமிழ் மக்களின் அந்தஸ்தை உயர்த்தும். ரணில் ஒரு நாடக மேடையை திறக்கிறார். அதில் சேர்ந்து நடிப்பதல்ல தமிழ் தரப்பின் வேலை. அதை ஒரு நாடகம் என்று அம்பலப்படுத்த வேண்டும். யுத்தத்தைப் போலவே பேச்சும் ஒரு கலைதான். அது ஒரு கூட்டு ஒழுக்கம். யுத்தத்தைப் போலவே பேச்சுகளுக்கும் வியூகங்கள் உண்டு. எனவே, ரணில் வகுக்கும் வியூகத்துக்கு எதிர் வியூகத்தை தமிழ்த் தரப்பும் வகுக்க வேண்டும்.'

நிலாந்தன் சொல்வதுபோல பேச்சு மேசையை சரியாக பயன்படுத்த வேண்டுமே தவிர கற்பனைகளில் சஞ்சரித்துக்கொண்டு பேச்சுகளை பகிஷ்கரிப்பது எந்த வகையிலும் நமக்கு உதவப்போவதில்லை.!

**- ஊர்க்குருவி**

# நெருக்கடிகளுக்கு தீர்வு காண்பதில் இளையோர் பங்களிப்பே அவசியம்!

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க

கொழும்பு, டிசெ. 12

நாட்டின் தற்போதைய நெருக்கடிக்கு தீர்வு காண்பதில் இளைஞர்களின் பங்களிப்பு அத்தியாவசியமானது. இந்தத் தீர்வு அடுத்த 25 வருடங்களை கருத்தில்கொண்டதாக அமைய வேண்டும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நாட்டின் அரசியல் மற்றும் பொருளாதார நிலைமைக்கும் அப்பால் சென்று இளைஞர்களின் எதிர்காலத்துக்காக நாட்டைத் தயார்படுத்த தான் தீர்மானித்திருப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

இளைஞர் சந்ததியினருக்கு உதவும் வகையில் அடுத்த 25 ஆண்டுகளுக்குப் பொருந்தும் வகையில், டிஜிற்றல் அபிவிருத்தியுடன் கூடிய எதிர்காலத்திற்கு ஏற்ற தீர்வுகள் குறித்தே நாம் கவனத்தில் கொள்ள வேண்டுமென்றும் அவர் குறிப்பிட்டார்.

அதற்கமைய நாடு தற்போது எதிர்கொண்டிருக்கும் நெருக்கடிக்கு தீர்வு காணும் முகமாக மேற்பார்வை குழுக்களுக்கு இளைஞர்களை நியமிப்பதற்கு அவசியமான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

கொழும்பு றோயல் கல்லூரியில் நேற்று நடைபெற்ற நிகழ்வு ஒன்றிலேயே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

மேலும், 2023 ஆம் ஆண்டில் கொண்டாடப்படவுள்ள 75ஆவது சுதந்திர தின நிகழ்வுடன் இணைந்ததாக இளைஞர்களுக்கான தேசிய அடித்தளமொன்று உருவாக்கப்பட்டிருப்பதாகவும் நாட்டைக் கட்டியெழுப்புவதற்காக இளைஞர்களை அதில் இணைந்து கொள்ளுமாறும் ஜனாதிபதி அழைப்பு விடுத்தார்.

உலகளாவிய நெருக்கடியான காலநிலை மாற்றம் தொடர்பான விடயத்தைக் கருத்திற்கொண்டு, அண்மையில் ஸ்தா



பிக்கப்பட்ட காலநிலை மாற்றம் தொடர்பான நிகழ்ச்சிக்கு ஒத்துழைப்பு வழங்குவதன் மூலம் அர்த்தமுள்ள செயல்பாட்டுக்கு வழிவகுக்குமாறும் ஜனாதிபதி இளைஞர்களை கேட்டுக்கொண்டார். (ஐ)

# வெளிநாட்டு பணியாளர் அனுப்பும் டொலர் உயர்வு

கொழும்பு, டிசெ. 12

2022ஆம் ஆண்டு நவம்பரில் இலங்கையின் வெளிநாட்டு பணியாளர்கள் அனுப்பும் பணம் 384.4 மில்லியன் அமெரிக்க டொலர்களாக அதிகரித்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

இதன்படி, ஆண்டின் முதல் பதினொரு மாதங்களுக்கான (ஜனவரி - நவம்பர்) மொத்த எண்ணிக்கை 3,313.9 மில்லியன் அமெரிக்க டொலர்களாக பதிவாகியுள்ளது.

முன்னர், செப்ரெம்பரில் 317.4 மில்லியன் டொலர்களும், ஒக்ரோபரில் 355.4 மில்லியன் அமெரிக்க டொலர்களும் இலங்கைக்குக் கிடைத்தன என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# பொருளாதார நெருக்கடியால் ரூ. 20,000 கோடி தங்கம் அடகு!

கொழும்பு, டிசெ. 12

நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடி காரணமாக, வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களில் 20 ஆயிரம் கோடி ரூபாய் பெறுமதியான தங்கம் அடகு வைக்கப்பட்டுள்ளது என்று பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பொருளாதாரம் மற்றும் புள்ளிவிவர கற்கைகள் திணைக்களம் மேற்கொண்ட ஆய்வில் தெரியவந்துள்ளது.

2022ஆம் ஆண்டின் முதல் 10 மாதங்களில் 193 பில்லியன் ரூபாய் (19,300 கோடி) பெறுமதியான தங்கம் அடகு வைக்கப்பட்டுள்ளது.

அரச அங்கீகாரம் பெற்ற 13 வர்த்தக வங்கிகள் மற்றும் 10 அடகு அல்லது நிதி நிறுவனங்களில் மேற்கொள்ளப்பட்ட ஆய்விலேயே குறித்த விடயம் தெரியவந்துள்ளதாக அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தங்கத்தை அடகு வைத்தவர்களில் பெரும்பாலானோர் நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் என்று பேராசிரியர் வசந்த அத்துகோரள சுட்டிக்காட்டியுள்ளார்.

தனியார் அடகு மையங்கள் தங்கத்தின் பெறுமதிக்கு அதிக பணத்தை வழங்குவதன் காரணமாக அவற்றை அதிகளவான நுகர்வோர் நாடுகின்றனர் என்றும் ஆய்வின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது. (ஐ)

# விபத்தில் சிப்பாய் பலி!

கொழும்பு, டிசெ. 12

வீதியில் சென்றுக்கொண்டிருந்த மோட்டார் சைக்கிள் திடீரென வீதியை கடக்க முயற்சித்த நாய் மீது மோதியதில் ஒருவர் உயிரிழந்தார்.

மொனராகலையில் இடம்பெற்ற இந்த விபத்தில், 41 வயதான இராணுவ சார்ஜன்ட் ஒருவர் உயிரிழந்தார்.

மோட்டார் சைக்கிளில் இரண்டு நபர்கள் பயணம் செய்த நிலையில் அவர்களில் ஒருவர் உயிரிழந்தார். மற்றவர் காயமடைந்து மொனராகலை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ஐ)

# கடலில் படகு விபத்து 4 மீனவர்கள் மீட்பு!

## ஒருவரை காணவில்லை

கொழும்பு, டிசெ. 12

பலத்த காற்று காரணமாக அம்பாறை சங்கமன்கண்டி கிழக்கு கடற்பிராந்தியத்தில் மீனவப் படகு ஒன்று விபத்துக்கு உள்ளானது. இந்தப் படகிலிருந்த இதுவரை நால்வர் மீட்கப்பட்டுள்ளனர் என்று கடற்படை பேச்சாளர் கப்டன் இந்திக்க டி சில்வா தெரிவித்தார்.

விபத்தில் காணாமல்போன மற்றுமொரு மீனவரைத் தேடும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று கடற்படை தெரிவித்துள்ளது.

திருகோணமலை மீன்பிடி துறைமுகத்திலிருந்து கடந்த 26ஆம் திகதி கடற்றொழிலுக்கு 5 மீனவர்களுடன் சென்ற நெடுநாள் மீன்பிடி படகு ஒன்றே இவ்வாறு விபத்துக்கு உள்ளானது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# காய்ச்சல், தலைவலி நீடித்தால் மருத்துவரிடம் செல்லுங்கள்!

## சுகாதார பிரிவு ஆலோசனை

கொழும்பு, டிசெ. 12

காய்ச்சல், தலைவலி மற்றும் உடல்வலி போன்ற அறிகுறிகள் காணப்படுமாயின் உடனடியாக மருத்துவ ஆலோசனைகளை பெற்றுக்கொள்ளுமாறு சுகாதார பிரிவினர் பொதுமக்களிடம் கோரியுள்ளனர்.

இந்த நாட்களில் மழையுடனான காலநிலை நிலவுவதன் காரணமாக டெங்கு உள்ளிட்ட வைரஸ் காய்ச்சல் பரவல் அதிகரித்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

நாடு முழுவதும் இந்த வாரத்தில் மட்டும் ஆயிரத்து 700 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

ஈழநாடு
Eelanadu
12.12.2022 திங்கட்கிழமை
பிலவ வருடம், கார்த்திகை 26

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# தந்திரமற்ற அரசியல் அணுகுமுறைகளின் விளைவு?

அரசியல் என்பது அடிப்படையில் தத்திரங்களின் கலையாகும். அதிலும் குறிப்பாக பலமற்ற சிறிய இனங்களுக்கான அரசியலானது எப்போதுமே தந்திரங்கள்மீது கரிசனை கொண்டதாகவே இருக்க வேண்டும். பலம்பொருந்திய தரப்புக்கள் பலத்தின் அடிப்படையில்தான் தங்களது தந்திரங்களை வகுப்பார்கள். ஆனால், பலமற்ற சிறிய இனங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் தலைமைகளோ பலமான தரப்புக்களைவிடவும் அதிகம் தந்திரங்கள்மீது கரிசனை கொண்டதாக இருக்க வேண்டும். ஏனெனில், தந்திரங்கள் மட்டுமே பலவீனமான தரப்புகளுக்கு கைகொடுக்கும்.

தமிழரசுக் கட்சி உருவாக்கப்பட்ட காலத்திலிருந்து தமிழ் தலைமைகள் பல்வேறு அரசியல் நகர்வுகளில் ஈடுபட்டிருக்கின்றனர். பல பேச்சுகளில் பங்குகொண்டிருக்கின்றனர். பிராந்திய, சர்வதேச அரசியல் தரப்புக்களோடு ஊடாடியிருக்கின்றன. இந்தப் பின்புலத்தில் பிராந்திய சக்தியான இந்தியா மற்றும் நோர்வேயின் பெயரிலான மேற்குலக தலையீடுகளை எதிர்கொண்டிருக்கின்றன. ஆனால், இதுவரையில் தமிழ் மக்களின் ஆகக்குறைந்த எதிர்பார்ப்புகளைக்கூட, பூர்த்திசெய்ய முடியவில்லை. தமிழ் தலைமைகள் என்போர் முன்னெடுத்த அனைத்து முயற்சிகளும் தோல்வியிலேயே முடிந்திருக்கின்றன.

அப்புக்காத்துக்களான மிதவாதிகளும் தோல்வியடைந்திருக்கின்றனர். ஆயுதப் போராட்ட அமைப்புகளும் தோல்வியடைந்திருக்கின்றன. ஒவ்வொரு தோல்வியும் தமிழ் மக்களின் அரசியல் இருப்பை மேலும் சிதைத்திருக்கின்றது. தமிழ் மக்கள் மேலும், மேலும் சிதறிச் செல்கின்றனர். எந்த வகையிலும் முன்னேற்றங்களை காணமுடியவில்லை. தமிழ் மக்களின் அரசியல் எதிர்காலத்தின் மீதான நம்பிக்கை குறுகிக்கொண்டு செல்ல, தமிழ் தேசியத்தின் பெயரிலான கட்சிகளின் எண்ணிக்கையோ அதிகரித்துக் கொண்டு செல்கின்றது. ஆனால், மாகாண சபையை ஆயுத இயங்கங்களின் ஒரு வெற்றியாகச் சொல்ல முடியும். குறிப்பாக ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணிக்கு இதில் பிரதான பங்கு உண்டு.

இவ்வாறானதொரு பின்புலத்தில்தான் மீண்டுமோர் அரசியல் தீர்வுக்கான முயற்சி துளிர்விட்டிருக்கின்றது. ஒருவேளை இதுவும் முளையிலேயே கருகிப் போகலாம் அல்லது சற்று துளிர்விட்டு பின்னர் கருகிப்போகலாம். அதாவது, ரணில் - மைத்திரி காலத்து புதிய அரசியல் யாப்பு முயற்சிகள் போல். எனவே, இந்த நிலைமையை தந்திரோபாய ரீதியாக எவ்வாறு எதிர்கொள்ளலாம்? அதற்கான வாய்ப்புக்கள் இருக்கின்றனவா? எவ்வாறான விடயங்களை முன்வைத்தால் அது அரசாங்கத்துக்கு ஒரு பொறியாக அமையும்? எவ்வாறான விடயங்களை முன்வைத்தால், அது தமிழர் தரப்புக்கு பொறியாக அமையும்? இந்தக் கேள்விகளின் அடிப்படையில்தான் தமிழர் தரப்பு ஒவ்வொரு விடயங்களையும் நகர்த்த வேண்டும்? பேச்சை அரசாங்கத்துக்கான நெருக்கடியாக மாற்ற வேண்டும். அதேவேளை, பேச்சிலிருந்து சாதாரணமாக விலகிச் செல்லாத வகையில் அரசாங்கத்துக்கு முட்டுகட்டையிட வேண்டும். இல்லாவிட்டால் ஒரு கட்டத்தில் பேச்சு தோல்வியடையும்போது, அரசாங்கம் எவ்வித நெருக்கடிகளும் இன்றி வெளியேறிவிடும். இந்த நிலைமைக்கு மீளவும் இடமளிக்கக்கூடாது. அவ்வாறு நடப்பதைத் தடுக்க வேண்டுமாயின், செய்யக்கூடியவற்றை முதலில் முன்வைக்க வேண்டும். அவற்றை செய்து முடிப்பதற்கான கால அவகாசத்தை வழங்க வேண்டும். இது தொடர்பில் இந்தியா மற்றும் இலங்கை விடயத்தில் ஆர்வமுள்ள சர்வதேச தரப்புகளை சாட்சியாக்க வேண்டும்.

இந்த அடிப்படையில் விடயங்களை முன்னெடுப்பதாயின், இன்றைய சூழலுக்கான அரசியல் தந்திரோபாயம் என்பது, அரசமைப்பில் இருக்கின்ற 13ஆவது திருத்தச் சட்டத்தை கையிலெடுப்பதுதான். அதே வேளை சாதாரண பெரும்பான்மையில் மாற்றியமைக்கக்கூடிய மாகாண சபை சட்டத்தில் மாற்றங்களைக் கோர வேண்டும். இந்த விடயங்களில் அரசாங்கம் எவ்வாறு நடந்துகொள்கின்றது என்பதை அவதானித்து, அடுத்த கட்டத்தை நகர்த்த வேண்டும். அரசாங்கம் இந்த விடயங்களை செய்யாது இழுத்தடிக்கும்போது, உள்ளக பொறிமுறையின் மீதான நம்பிக்கை இன்மையை ஆதாரபூர்வமாக அம்பலப்படுத்த முடியும். இதுதான் தமிழர் தரப்பு கைக்கொள்ள வேண்டிய தந்திரோபாய அணுமுறையாகும். இவ்வாறான அணுகுமுறையை கடந்த காலத்தில் தமிழ் கட்சிகளின் தலைமைகள் கைக்கொள்ளவில்லை. இதன் காரணமாகவே ஒவ்வொரு முறையும் வெறுங்கையுடன் திரும்பிவர நேர்ந்தது. பேச்சு வெற்றிபெற்றாலும் நன்மை அல்லது தோல்வியடைந்தாலும் நன்மை என்னும் அடிப்படையில் அமைவதுதான் தந்திரோபாய அணுமுறையாகும்.

# குழந்தைகளை பாதுகாப்பதில் அவதானமாக செயல்படுங்கள்!

## லேடி ரிட்ஜ்வே மருத்துவமனை அறிவுறுத்து

கொழும்பு, டிசெ. 12

கடும் காற்று மற்றும் குளிருடனான காலநிலை காரணமாக குழந்தைகளை இலகுவாக நோய்கள் தாக்குகின்றன. இதன் விளைவாக கடும் குளிரில் இருந்து குழந்தைகளை பாதுகாப்பதில் அவதானமாக செயல்படுமாறு கொழும்பு லேடி ரிட்ஜ்வே சிறுவர் மருத்துவமனையின் குழந்தை நல மருத்துவர் தீபால் பெரேரா கோரியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

காற்று மற்றும் குளிருடான காலநிலை காரணமாக குழந்தைகளுக்கு பல நோய்கள் ஏற்படக்கூடும். மேலும் கடும் குளிரில் இருந்து குழந்தைகளை பாதுகாத்துக் கொள்ள வேண்டும். குழந்தைகளுக்கு காய்ச்சல் குறிப்பாக குளிர்ச்சியுடன் அதிகரிக்கும். எனவே இந்த நாட்களில் குழந்தைகளை வெளியில் அழைத்துச் சென்றால் பாதுகாப்பான உடை, தொப்பிகளை அணிந்து காலுறைகளை அணிந்து அழைத்து செல்ல வேண்டும்.

மேலும் காற்று மாசடைவு காரணமாக வெளியில் செல்லும் போது முகக்கவசம் அணிந்து செல்லவேண்டும். காற்று மாசடைவு எடை குறைந்த குழந்தைகளுக்கு உகந்ததல்ல. அவர்களின் உடல் வெப்பநிலை குறைந்து அவர்கள் இலகுவில் நோய்வாய்ப்படலாம் - என்றார். (ஐ)

# விபத்தையடுத்து பெண்ணை தாக்கிய இரு பெண்கள் கைது!

கொழும்பு, டிசெ. 12

கொழும்பு - கொள்ளுப்பிட்டியில் நேற்று முன்தினம் வாகன விபத்தை தொடர்ந்து பெண் ஒருவரை தாக்கிய இரண்டு பெண்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இரவு விடுதியிலிருந்து திரும்பிய சொகுசு கார் ஒன்று அதே திசையில் சென்ற முச்சக்கர வண்டியின் மீது மோதியதில் ஒருவர் உயிரிழந்தார்.

முச்சக்கர வண்டி சாரதி கொழும்பு தேசிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னரே உயிரிழந்தார்.

சொகுசு வாகனத்தை ஓட்டி வந்த நபர் அங்கிருந்து தப்பியோடியுள்ளார். வாகனத்தில் மேலும் 3 பெண்களும், ஆணொருவரும் இருந்தனர். வாகனத்தில் இருந்த பெண் ஒருவர், அங்கு கூடிய மக்களிடம் சிக்கிக் கொண்டார்.

அவரை இரண்டு பெண்கள் தாக்கிய காட்சிகள் சமூக வலைதளங்களில் பரவலாகப் பரவின. தாக்குதலுக்கு உள்ளான பெண், கொள்ளுப்பிட்டி பொலிஸாரிடம் வாக்குமூலம் பதிவு செய்ததையடுத்து, இரு பெண்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட பெண்கள் 42 மற்றும் 64 வயதானவர்கள் என்றும் தனியார் நிறுவனமொன்றின் துப்புரவு பணியாளர்கள் எனவும் அறிய வருகின்றது.

இருவரையும் இன்றைய தினம் கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளனர். இதேசமயம், தலைமறை வாகியுள்ள வாகன சாரதியை கைது செய்ய பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# வறிய குடும்பத்துக்கு உதவுவதாக நடித்து 9,500 ரூபாய் சுருட்டப்பட்டது!

யாழ்ப்பாணம், டிசெ. 12

வறிய குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகளுக்கு நிதி உதவி செய்வதாகக் கூறி தொலைபேசியில் பேசி ஒருவரிடம் 9 ஆயிரத்து 500 ரூபாயை மோசடி செய்த சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது.

இது பற்றி தெரிய வருவதாவது,

உடுவிலை சேர்ந்த வறிய குடும்பத்தை சேர்ந்த ஒருவரை கைபேசியில் தொடர்பு கொண்ட இனந்தெரியாத நபர், தான் வவுனியாவிலுள்ள அறக்கட்டளை ஒன்றில் பணிபுரிகிறார் என்றும் கஷ்டப்பட்ட பிள்ளைகளுக்கு உதவி செய்வதாகவும் கூறியுள்ளார்.

அத்துடன், தம்மிடம் 28 பேரின் விவரம் உள்ளதாகவும் இன்னும் 2பேரின் விவரம் தேவை என்றும் வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட இருவரின் விவரங்களை தருமாறும் கோரியுள்ளார். இதையடுத்து, அவர்களுடன் தொடர்பு கொண்ட அவர் தனது தாயாரின் நினைவாக உதவி செய்யவுள்ளதாகவும், அதற்கு முன்னதாக 074 324 4621 என்ற இலக்கத்துக்கு இ . சற். முறைமூலம் 9,500 ரூபாய் அனுப்பிவிடுமாறும் உதவி வழங்கும் பணத்துடன் சேர்த்து அந்தத் தொகையை வழங்குவதாகவும் அவர் கூறியுள்ளார்.

இதை நம்பியவர், அவர் கூறிய இலக்கத்துக்கு 9,500 ரூபாயை அனுப்பியுள்ளார். அதன் பின்னர் அந்த இலக்கத்துடன் பலமுறை தொடர்பு கொண்டபோதும் தொடர்பை ஏற்படுத்த முடியவில்லை என்றும் தெரிய வருகின்றது.

இதேசமயம், ஏழை மக்களை குறிவைத்து முன்னெடுக்கப்படும் இவ்வாறான சம்பவங்கள் அண்மைக்காலமாக அதிகரித்துள்ளன. இது தொடர்பில் பொதுமக்கள் விழிப்புடன் செயல்பட வேண்டும். (ஐ)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



# தமிழகத்தைத் தாக்கியது ‘மண்டாஸ்’; 6 பேர் மரணம் 9,000 பேர் இடப்பெயர்வு



சென்னை, டிசெ. 12

தமிழகத்தை தாக்கிய மண்டாஸ் புயல் தாக்கத்தால் 6 பேர் உயிரிழந்தனர். 9 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

வங்கக் கடலில் அந்தமான் அருகே கடந்த 5-ம் திகதி உருவான காற்றழுத்த தாழ்வுப் பகுதி, காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெற்று, கடந்த 7ஆம் திகதி மண்டாஸ் புயலாக வலுவடைந்தது. இந்தப் புயல் நேற்று முன்தினம் மாமல்லபுரம் கரையை 70 கி. மீ. வேகத்தில் கடந்தது.

புயல் தாக்கத்தால் சென்னை, திருவள்ளூர், செங்கல்பட்டு, விழுப்புரம் மாவட்டங்களில் கடலோரப் பகுதிகளில் வெள்ளிக்கிழமை காலை முதலே பலத்த காற்று வீசியது. கடல் கொந்தளிப்புடன் காணப்பட்டது.

இந்நிலையில், வெள்ளிக்கிழமை இரவு 9.30 மணி முதல் மாமல்லபுரம் அருகே புயல் கரையைக் கடக்கத் தொடங்கியது. நேற்றுமுன்தினம் அதிகாலை 3 மணியளவில் முழுவதுமாக கரையைக் கடந்தது. அப்போது சென்னை, செங்கல்பட்டு மாவட்டங்களில் 70 கி. மீ. வேகத்தில் பலத்த சப்தத்துடன் சூறாவளிக் காற்று வீசியது.

பலத்த காற்றால் சென்னையில் மட்டும் 400இற்கும் மேற்பட்ட மரங்கள் முறிந்து விழுந்தன. அவற்றில் 150 மரங்கள், மின் கம்பங்கள் மீது விழுந்தன. மாநகராட்சி, மின்சாரம், தீயணைப்புப் படை, காவல் துறையினர் இணைந்து மரங்களை அகற்றினர்.

புயல் மற்றும் மழையால் நேற்று 6 பேர் உயிரிழந்தனர். 98 கால்நடைகள் இறந்தன. 181 வீடுகள் மற்றும் குடிசைகள் சேதமடைந்துள்ளன. காசி மேடு மீன்பிடித் துறைமுகத்தில் 200 இற்கும் மேற்பட்ட படகுகள் சேதமடைந்தன.

புயலால் வண்டலூர் உயிரியல் பூங்கா, கிண்டி சிறுவர் பூங்காவில் ஏற்பட்ட சேதங்களையும், அவற்றைச் சீரமைக்கும் பணிகளையும் வனத் துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் ஆய்வு செய்தார்.

புயல், கனமழையால் பாதிக்கப் பட்ட காசிமேடு மீன்பிடித் துறை முகம் உள்ளிட்ட இடங்களில் நேற்று முன்தினம் ஆய்வு மேற்கொண்ட முதல்வர் ஸ்டாலின், சேதமடைந்த படகுகளைப் பார்வையிட்டதுடன், பாதிக்கப்பட்டவர்களுக்கு உணவு மற்றும் நிவாரணப் பொருட்களை வழங்கினார். (ஐ)

# பாரதியாரின் எண்ணங்களை செயல்படுத்தி வருகின்றேன்!

## பிரதமர் நரேந்திரமோடி

புதுடில்லி, டிசெ. 12

பாரதியாரின் எண்ணங்களை செயல்படுத்தி வருகிறேன் என்று பிரதமர் நரேந்திர மோடி தனது ருவிற்றர் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

பாரதியாரின் 141வது பிறந்த தினம் நேற்றுக் கொண்டாடப்பட்டது. இந்த நிலையிலேயே அவர் இந்தப் பதிவை இட்டுள்ளார்.

அந்தப் பதிவில் அவர் கூறியிருப்பதாவது: மகாகவி சுப்பிரமணிய பாரதியின் பிறந்த தினத்தில் நான் அவருக்கு தலைவணங்குகிறேன். அவர் மிகுந்த தைரியமும், புத்திக்கூர்மையும் உடையவர். இந்தியாவினுடைய வளர்ச்சி குறித்து அவருக்கு மிகப் பெரிய தொலை நோக்குப் பார்வை இருந்துள்ளது. நாங்கள் அவரது அந்த தொலைநோக்குப் பார்வையை அனைத்துத் துறைகளிலும் செயல்படுத்த உழைத்து வருகிறோம் எனப் பதிவிட்டுள்ளார். (ஐ)

# தமிழ்நாடு அரசு கடிதம் எழுதினால் கல்லணை பாரம்பரிய சின்னமாகும்!



புதுடில்லி, டிசெ. 12

மாநில அரசு தகுந்த ஆவணங்களுடன் கடிதம் எழுதினால் கல்லணையை சர்வதேச பாரம்பரிய சின்னமாக அறிவிக்க வேண்டிய நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொள்ளும் என மத்திய வெளியுறவு, கலாசாரத் துறை அமைச்சர் மீனாட்சி லேகி மாநிலங்களவையில் தெரிவித்தார்.

தி. மு. க. மாநிலங்களவைக் குழுத் தலைவர் திருச்சி சிவா இந்த விவகாரத்தை அவையின் கவனத்திற்கு கொண்டு வந்தபோதே மத்திய இணையமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

மாநிலங்களவையில், “தஞ்சாவூர் மாவட்டத்தில், முதல் நூற்றாண்டில் சோழ மன்னன் கரிகாலனால் காவிரி ஆற்றின் குறுக்கு கட்டப்பட்ட கல்லணை உள்ளது. இது 2,000 ஆண்டுகளாக நிலைத்து நிற்கிறது. இது உலகிலே கட்டப்பட்ட முதல் நீர்த்தேக்கமாகவும் கருதப்படுகிறது. இந்த அணையைக் காண கிரேக்க, உரோம் மக்கள் கூட இங்கு வந்துள்ளனர். இந்த அணையின் 2,000 ஆண்டுகள் பழைமையை கருத்தில் கொண்டு, இந்த நீர் த்தேக்கத்தை சர்வதேச பாரம்பரிய சின்னமாக அறிவிப்பதற்கான சாத்தியக் கூறுகளுக்கு மத்திய அரசு முயற்சிக்குமா ?’ என திருச்சி சிவா கோரினார் .

இதற்கு மத்திய இணையமைச்சர் மீனாட்சி லேகி பதிலளித்து கூறுகையில், ‘இந்த கருத்து பாராட்டத்தக்கது. மாநில அரசு எங்களுக்கு கடிதம் கொடுத்தால் மட்டுமே, இதற்கான முயற்சிகளை மேற்கொள்ள முடியும். மாநில அரசிடமிருந்து தக்க ஆவணங்களைப் பெற்றால் மட்டுமே இந்த அணை குறித்து முழு நாட்டிற்கும் பயனளிக்கும் பணிகளை மேற் கொள்ள முடிவும். மேலும் இந்த அணையை அம்ரித் சரோவர் பணியின் கீழ் கொண்டு வருவதற்கும் சாத்தியம் எனக் குறிப்பிட்டார் லேகி.

பின்னர் இதே விவகாரம் தொடர்பாக மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமனும் பேசி னார். அவர் கூறுகையில், “இது தொடர்பான தகவலை திருத்த விரும்புகின்றேன். இந்த பழமையான கல்லணையை பாதுகாக்கவும், பராமரிக்கவும் ஏற்கனவே அறிவிப்பை வெளியிட்டு மத்திய அரசு நிதி உதவியையும் வழங்கியுள்ளது. சர்வதேச பாரம்பரிய சின்னமாக அறிவிப்பது முற்றிலும் வேறுபட்ட பிரச்னை. பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான கூட்டத்தில் மிகப்பழமையான கல்லணை நீர்த் தேக்கத்துக்கு தேவையான நிதி ஒதுக்கீடு அறிவிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டது. அந்த உண்மையை உணர்ந்துகொள்ள இந்த சபையின் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன்” என்றார் அவர். (ஐ)

டிசெம்பர் - 12 திங்கட்கிழமை
சுபகிருது வருடம் - கார்த்திகை 26
நல்ல நேரம் : 06.00 - 07.30
ராகு காலம் : 07.30 - 09.00
திதி : சதுர்த்தி




**மேடம்**
தேவைக்கேற்ப வருவாய் வந்து சேரும். புதிய முயற்சி பலன் தரும். நண்பர்கள் ஆதரவுடன் உங்கள் எண்ணம் நிறைவேறும்.பணியாளர்கள் ஒத்துழைப்பு அதிகரிக்கும்.

**இடபம்**
பிரிந்தவர்கள் ஒன்று சேருவார்கள். எதிர்பார்த்த பணம் வந்து சேரும். உங்கள் முயற்சி பலிதமாகும். குல தெய்வ அருளால் உங்கள் செயல்களில் வெற்றி ஏற்படும். எண்ணியது நிறைவேறும்.

**மிதுனம்**
குடும்பத்தில் ஏற்பட்ட பிரச்னை சரியாகும். குழப்பம் விலகும்.எதிர்பாராத செலவு தோன்றும். பணத் தேவை அதிகரிக்கும். உங்களுக்கு சிரமம் உண்டாகும். பணி புரியும் இடத்தில் நன்மை உண்டாகும்.

**கடகம்**
உங்கள் எதிர்பார்ப்பு நிறைவேறும்.எதிர்பார்த்த தகவல் வந்து சேரும். ஓய்வின்றி உழைப்பீர்கள். மனம் அமைதிப்படும்.செலவு அதிகரிக்கும் என்றாலும் உங்கள் முயற்சி வெற்றியாகும்.

**சிம்மம்**
உற்சாகத்துடன் செயல்பட்டுவீர்கள். நீங்கள் எதிர்பார்த்த தகவல் வந்து சேரும். தொழிலில் லாபம் அதிகரிக்கும். பழைய முதலீடுகளில் இருந்து வருமானம் வந்து சேரும். குடும்பத்தில் ஏற்பட்ட பிரச்னை தீரும்.

**கன்னி**
எதிர்பார்ப்பு பூர்த்தியாகும்.நண்பர்கள் ஆதரவுடன் முயற்சி வெற்றியாகும். லாபம் அதிகரிக்கும்.வியாபாரத்தை விரிவு செய்யும் முயற்சி நிறைவேறும். எதிராளிகள் விலகிச் செல்வார்கள்.

**துலாம்**
கொடுக்கல் வாங்கலில் பிரச்னை ஏற்படும். தந்தை வழியே சில சங்கடம் தோன்றும்.நீங்கள் மேற்கொள்ளும் முயற்சியில் லாபம் காண்பீர்கள் என்றாலும் பணவரவு இழுபறியாகும்.

**விருட்சிகம்**
பணி இடத்தில் உங்களை சிலர் சீண்டிப் பார்ப்பார்கள். அமைதி காப்பது நன்மை அளிக்கும்.கடவுள் வழிபாடு இன்னலை அகற்றும். உங்கள் வேலையில் கவனம் செலுத்துங்கள்.

**தனுசு**
மாலை வரை உங்கள் எதிர்பார்ப்பு நிறைவேறும். பணிபுரியும் இடத்தில் விரும்பியதை அடைவீர்கள். உங்கள் செயல்களில் கவனம் தேவை. தன்னம்பிக்கையுடன் செயல்படுவீர்கள்.லாபம் அதிகரிக்கும்.

**மகரம்**
குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும்.நண்பர்கள் ஒத்துழைப்பு அதிகரிக்கும். நேற்று இருந்த பிரச்னை முடிவிற்கு வரும்.வருவாயில் ஏற்பட்ட தடை விலகும். உங்கள் செயலில் நன்மை உண்டாகும்.

**கும்பம்**
பணியில் ஏற்பட்ட தடைகளை சரி செய்வீர்கள். குடும்பத்தினர் உதவியால் உங்கள் எண்ணம் நிறைவேறும்.திருப்பங்கள் நிறைந்த நாள். மறைமுக எதிரிகளைக் கண்டறிவீர்கள்.

**மீனம்**
உறவினர்கள் ஆதரவுடன் செயல் ஒன்றில் வெற்றி காண்பீர்கள். வியாபார இடத்தில் மகிழ்ச்சிக்குரிய சம்பவம் நடைபெறும். எதிர்பார்ப்பு நிறைவேறும். நேற்றைய பிரச்னை மீண்டும் தலைதூக்கும். உறவினர்களால் சில சங்கடம் ஏற்படும்.

# வடக்கு - கிழக்கு மாகாணங்களில் 1,092 கால்நடைகள் உயிரிழந்தன!

**கொழும்பு, டிசெ.12**

**நாட்டில் ஏற்பட்டுள்ள எதிர்பாராத குளிருடனான காலநிலையால் ஏற்பட்ட அதிர்ச்சியால் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் கடந்த இரு தினங்களில் 802 மாடுகள், 34 எருமைகள் மற்றும் 256 ஆடுகள் என 1092 கால்நடைகள் உயிரிழந்தன.**

வடக்கின், கிளிநொச்சி முல்லைத்தீவு மற்றும் கிழக்கு மாகாணத்தின் திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் கடந்த வியாழன், வெள்ளிக்கிழமைகள் இந்த கால்நடைகள் உயிரிழந்தன.

கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தின் புள்ளிவிபரங்களின்படி வடக்கு மாகாணத்தில் 358 மாடுகளும் 191 ஆடுகளும் உயிரிழந்ததுடன் கிழக்கு மாகாணத்தில் 444 மாடுகளும் 34 எருமைகளும் 65 ஆடுகளும் உயிரிழந்தன.

இதனிடையே, கால்நடைகளின் திடீர் உயிரிழப்பு தொடர்பில் கால்நடைகள் திணைக்களம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளது. (ஐ)



# கட்டைக்காட்டில் இரத்த தான முகாம்!

வடமராட்சி, டிசெ. 12

வடமராட்சி கிழக்கு - கட்டைக்காட்டு பகுதியில் இரத்த தான நிகழ்வு நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

சென். மேரிஸ் விளையாட்டு கழகம் மற்றும் புனித கப்பலேந்திமாதா ஆலய இளையோர் ஒருங்கிணைந்து குறித்த இரத்ததான முகாமை நடத்தினர்.

அருட்தந்தை அமல்ராஜ் அடிகளார் தலைமையில் நேற்று காலை கட்டைக்காடு மரியாள் மண்டபத்தில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

உயிர் காக்கும் உன்னத பணியில் இளைஞர்கள், யுவதிகள் எனப் பலரும் கலந்து கொண்டு தங்களது குருதி கொடையை வழங்கியிருந் தனர்.

கட்டைகாடு பகுதியில் முதன் முதலாக இந்த முகாம் நடைபெற்றதாகவும். உயிர் காக்கும் உன்னத பணியில் தொடர்ந்தும் கலந்து கொள்வோம் என அப்பகுதி இளைஞர்கள் தெரிவித்தனர். (ஐ-02)

# வட்டுக்கோட்டையிலும் பாரதியார் பிறந்தநாள்!



யாழ்ப்பாணம், டிசெ. 12

சுப்பிரமணிய பாரதியாரின் 140ஆவது பிறந்ததின நிகழ்வு நேற்று வட்டுக்கோட்டையில் அமைந்துள்ள மகாகவி பாரதியாரின் திருவுருவச் சிலைக்கு முன்பாக நடைபெற்றது.

கலாநிதி சிதம்பரமோகன் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது. இதன்போது மகாகவியின் திருவுருவச் சிலைக்கு மலர்மாலை அணிவித்து மலர்தூவி மதிப்பளிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் கலாநிதி சிதம்பரமோகன், மதகுருமார் சமூகமட்ட அமைப்பினர் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ஐ)

# பாரதியாரின் 140ஆவது பிறந்தநாள் யாழ்ப்பாணத்தில் கொண்டாட்டம்!

யாழ்ப்பாணம், டிசெ. 12

சுப்பிரமணிய பாரதியாரின் 140 ஆவது பிறந்ததின நிகழ்வு நேற்று ஞாயிற்றுக்கிழமை நல்லூர் அரசடி வீதியில் அமைந்துள்ள பாரதியாரின் நினைவுத்தூபியில் நடைபெற்றது.

யாழ்ப்பாணம் இந்திய உதவித்தூதகத்தின் எற்பாட்டில், நடைபெற்ற இந்த நிகழ்வில், பிரதம அதிதியாக யாழ். இந்திய உதவித் தூதுவர் ராகேஸ் நட்ராஜ் ஜெயபாஸ்கர் கலந்துகொண்டு பாரதியாரின் உருவச்சிலைக்கு மலர் மாலையை அணிவித்தார்.

இந்த நிகழ்வில் யாழ். இந்திய உதவித்தூதரத்தின் சிரேஷ்ட அதிகாரி ஏ. கிருஸ்ணமூர்த்தி, தமிழ் சங்கத்தின் உறுப்பினர்கள் பலரும் கலந்துகொண்டனர். (ஐ)



# வடக்கு எழுத்தாளரவையினர் யாழில் கூடி கலந்துரையாடல்!

யாழ்ப்பாணம், டிசெ. 12

வடக்கு மாகாண எழுத்தாளரவை - 2022 கலந்துரையாடல் கடந்த புதன்கிழமை யாழ்ப்பாணம் பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

வடக்கு மாகாண பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் திருமதி ராஜமல்லிகை சிவசுந்தரசர்மா தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் வடக்கு மாகாணத்திலுள்ள சிறுகதை எழுத்தாளர்கள், இலக்கியவாதிகள் எனப் பலர்



கலந்து கொண்டனர்.

இதன்போது எழுத்தாளர்கள், இலக்கியவாதிகள் தங்களை அறிமுகப்படுத்திக் கொண்டதுடன், எழுத்தாளரவையின் நோக்க உரையை பேராசிரியர் மனோன்மணி சண்முதாஸ் வழங்கினார். (ஐ)

# மண்டாஸ் புயலின் தாக்கம் குருநகரில் 30 படகுகள் சேதம்!



யாழ்ப்பாணம், டிசெ. 12

மண்டாஸ் புயலின் தாக்கம் காரணமாக குருநகரில் மீனவர்களின் 30 படகுகள் சேதமடைந்துள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

சீரற்ற வானிலை காரணமாக ஏற்பட்ட கடல் கொந்தளிப்பால் கரையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மீனவர்களின் படகுகளே அலைகளால் அடிக்கப்பட்டு சேதமடைந்தன என்று மீனவர்கள் தெரிவித்தனர்.

இதனால் கடற்றொழிலுக்கு செல்ல முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர் என்றும் பொருளாதார ரீதியாக நலிவடைந்துள்ளதாகவும் மேலும், சேதமடைந்த படகுகளை திருத்தும் வசதி தம்மிடம் இல்லை என்றும் பாதிக்கப்பட்ட மீனவர்கள் தெரிவித்தனர்.

மேலும், தமக்கு அரசாங்கம் இழப்பீடு வழங்க வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்தனர். (ஐ)

# வடமராட்சி விபத்தில் இளைஞர் உயிரிழப்பு

வடமாட்சி, டிசெ. 12

வடமராட்சி - வல்லைப் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்தார்.

நெல்லியடி திருமகள் சோதி வீதியைச் சேர்ந்த பூ. கவிதாசன் (வயது 24) எனும் இளைஞனே உயிரிழந்தார்.

வல்லை பகுதியில் வாகனம் ஒன்றை முந்திச் செல்ல முற்பட்ட வேளை குறித்த விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

விபத்தில் படுகாயமடைந்த இளைஞனை அங்கிருந்தவர்கள் மீட்டு, பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சேர்த்தனர்.

அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு அவர்மாற்றப்பட்ட நிலையில், அங்கு சிகிச்சை பலனின்றி இளைஞன் உயிரிழந்தார். (ஐ-02)

# புகையிரதப் பாதை மூடப்படுவதால் விமானம் மூலம் யாழுக்கு பயணிகள்!

## சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை ஆய்வு

கொழும்பு, டிசெ. 12

**யாழ்ப்பாணத்துக்கான புகையிரதப் பாதை மூடப்படுவதால் விமானம் மூலம் சுற்றுலா பயணிகளை அழைத்து வருவது குறித்து ஆராயப்படுகிறது என்று இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் பிரியந்த பெர்னாண்டோ தெரிவித்தார்.**

“வடக்கு புகையிரதப் பாதை திருத்தப் பணிகளுக்காக சுமார் 6 மாதங்களுக்கு மூடப்படவுள்ளது. இதனால், சுற்றுலா பயணிகள் யாழ்ப்பாணம் செல்வதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. இதனால், சுற்றுலா பயணிகளை யாழ்ப்பாணத்துக்கு அழைத்து செல்லுவது குறித்து கவனம் செலுத்தப்படுகிறது.

“தற்போது நாட்டுக்கு அதிகளவு சுற்றுலா பயணிகள் வருகை தருகின்றனர். இந்த மாதத்தில் மட்டும் டிசம்பர் 8ஆம் திகதி வரை கிட்டத்தட்ட 17ஆயிரம் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளனர். எதிர்வரும் ஜனவரி மாதத்தில் ஐரோப்பிய சுற்றுலா பயணிகள் நாட்டுக்கு வருவதில் அதிகரிப்பு ஏற்படலாம். வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு போதுமான உள்நாட்டு விமான சேவைகள் நாட்டில் இல்லாதது பெரும் இழப்பாகும்.

“வடக்கு புகையிரதப் பாதைகள் திருத்தப் பணிகள் காரணமாக புகையிரத சேவையை மட்டுப்படுத்த வேண்டியுள்ளதால் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளை யாழ்ப்பாணத்திற்கு அழைத்து செல்வதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. இவ்வாறான நிலையில் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளை இரத்மலானையில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு விமானம் மூலம் அழைத்துச் செல்வது குறித்தும் இதற்கென விமான சேவையை ஆரம்பிப்பது தொடர்பில் கவனம் செலுத்தப்படும்”, என்றும் அவர் தெரிவித்தார். (ஐ)



# கட்டாக்காலி மாடுகள் வவுனியாவில் பிடிப்பு!

வவுனியா, டிசெ. 12

வவுனியா நகரில் வீதிகளில் கைவிடப்பட்ட கால்நடைகளை நேற்று ஞாயிற்றுக்கிழமை நகரசபை ஊழியர்களும் பொலிசாரும் இணைந்து பிடித்து நகரசபையில் ஒப்படைத்துள்ளனர்.

உரியவர்கள் கால்நடைகளின் அடையாளங்களை உறுதிப்படுத்தி அவற்றை பெற்றுக்கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

வவுனியா நகரில் வீதிகளில் கைவிடப்பட்ட கால்நடைகளினால் அதிகளவு விபத்துகள் இடம்பெறுகின்றன என்று அண்மையில் பொலிஸார் தெரிவித்தனர். இதற்கமையவே, நேற்றைய தினம் 80இற்கும் மேற்பட்ட கால்நடைகள் பிடிக்கப்பட்டு நகர சபையில் ஒப்படைக்கப்பட்டன.

கால்நடைகளின் உரிமையாளர்கள் அவற்றின் அடையாளங்களை உறுதிப்படுத்தி தண்டப் பணத்தை செலுத்தி பெற்றுக்கொள்ளுமாறும், அவ்வாறு பெற்றுக்கொள்ளத் தவறினால் அவற்றை ஏலத்தில் விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# போராளிகள் நலன்புரி சங்கம் அங்குரார்ப்பண நிகழ்வு நேற்று!

யாழ்ப்பாணம், டிசெ. 12

போராளிகள் நலன்புரிச் சங்கம் அங்குரார்ப்பண நிகழ்வு நேற்று ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.

“இனத்துக்காக உழைத்தவர்களை இன்னலின்றி வாழவைப்போம்” எனும் தொனிப்பொருளில் அங்குரார்ப்பண நிகழ்வு யாழ். இளங்கலைஞர் மண்டபத்தில் நடைபெற்றது.



சர்வ மதத் தலைவர்களின் ஆசியுரையோடு இடம்பெற்ற குறித்த நிகழ்வில் போராளிகள், சர்வ மத தலைவர்கள், வர்த்தக பிரதிநிதிகள், முன்னாள் போராளிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஐ)

# மோட்டார் சைக்கிள்கள் திருட்டு; கிளிநொச்சியில் ஒருவர் கைது!

கிளிநொச்சி, டிசெ. 12

கிளிநொச்சியில் பல்வேறு பகுதிகளிலும் மோட்டார் சைக்கிள்களை திருடி வந்த சந்தேக நபர் ஒருவரை கிளிநொச்சி மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவு பொலிஸார் நேற்று முன்தினம் கைதுசெய்தனர்.

இதன்போது கடந்த மாதம் 16ஆம் திகதி திருடப்பட்டதாக கூறப்படும் மோட்டார் சைக்கிளொன்றையும் சந்தேக நபரிடமிருந்து பொலிஸார் மீட்டுள்ளனர்.

இவ்விடயம் தொடர்பில் தெரியவருவதாவது,

அண்மைய நாட்களாக கிளிநொச்சியின் பல்வேறு பகுதிகளிலும் மோட்டார் சைக்கிள்கள் திருடப்படும் சம்பவங்கள் அதிகரித்து காணப்படுகின்றன. இந்நிலையில் கடந்த மாதம் 16ஆம் திகதி அலுவலக விடுதியொன்றில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த பெண்களுக்கான மோட்டார் சைக்கிளொன்று திருடப்பட்டிருந்தது.

இது தொடர்பில் கிளிநொச்சி இரணைமடுவில் உள்ள கிளிநொச்சி மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவு பொலிஸார் மேற்கொண்ட விசேட தேடுதல் நடவடிக்கையின்போதே, நேற்றுமுன்தினம் வீடொன்றினுள் மறைத்து வைத்திருந்த குறித்த மோட்டார் சைக்கிளோடு சந்தேக நபரை கைது செய்துள்ளனர்.

இதேவேளை, சந்தேக நபரையும் சான்றுப் பொருளையும் மேலதிக விசாரணைகளின் பின்னர் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவு பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

# நிர்மாண கைத்தொழில் முறைகேடு; ஆயிரம் முறைப்பாடுகள் பதிவாகின

கொழும்பு, டிசெ. 12

நிர்மாண கைத்தொழிலில் இடம்பெற்ற முறைகேடுகள் தொடர்பில் கடந்த ஒரு வருடத்துக்குள் சுமார் 1,000 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்று நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியுடன் நிர்மாணத்துறை தொடர்பில் கிடைக்கப்பெறும் முறைப்பாடுகள் அதிகரித்து வருகின்றன என்றும் சபையின் பணிப்பாளர் நாயகம், பொறியியலாளர் சஞ்ஜீவ ஜயசுந்தர குறிப்பிட்டுள்ளார்.

கொடுப்பனவு செலுத்தப்படாமை தொடர்பிலேயே அதிக முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன. நிர்மாணத்துறையில் ஏற்பட்டுள்ள பிரச்னைகள் தொடர்பான முறைப்பாடுகளை எழுத்துமூலம் தமது அதிகார சபைக்கு சமர்ப்பிக்க முடியும் என நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார். (ஐ)

# யாழில் சிகிச்சையின்போது தப்பியோடிய கைதி கைது!

யாழ்ப்பாணம், டிசெ. 12

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் தப்பியோடிய விளக்கமறியல் கைதி கோப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பரந்தனில் மோட்டார் சைக்கிளில் திருடியமை , திருடிய மோட்டார் சைக்கிளில் உரும்பிராய் பகுதியில் சங்கிலி அறுத்தமை, இளவாலை பகுதியில் இரண்டு வீடுகளின் கதவுகளை உடைத்து உள்நுழைந்து திருடியமை உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுகளின் கீழ் கைது செய்யப்பட்ட இளவாலை பகுதியை சேர்ந்த 25 வயதுடைய இளைஞன் , நீதிமன்ற உத்தரவின் பேரில் விளக்கமறியலில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

அந்நிலையில் திடீர் சுகவீனமுற்ற நிலையில் சிறைச்சாலை பாதுகாவலர்களின் பாதுகாப்பில் யாழ். போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் தப்பியோடி இருந்தார்.

தப்பியோடிய நபரை, சிறைச்சாலை பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் மற்றும் பொலிஸார் தேடி வந்த நிலையில் , நேற்று முன்தினம் சனிக்கிழமை கோப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். (ஐ)

# நாட்டில் குளிர் காலநிலை படிப்படியாக குறைகிறது!

## வளிமண்டலவியல் திணைக்களம்

கொழும்பு, டிசெ. 12

நாடளாவிய ரீதியில் பல பிரதேசங்களில் நிலவிய குளிர் காலநிலை படிப்படியாக குறைந்து வருவதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மாண்டஸ் சூறாவளியின் தாக்கமும் நாட்டைவிட்டு விலகியுள்ளதாக திணைக்களத்தின் முன்னறிவிப்பு திணைக்களத்தின் பணிப்பாளர் ஷிரோமணி ஜெயவர்த்தன தெரிவித்துள்ளார்.

இதேவேளை, நேற்றுக் காலை 8 மணியளவில் கட்டட ஆராய்ச்சி நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட அறிக்கையில், நாட்டில் காற்றின் தரம் வழமைக்கு திரும்பியுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

அமெரிக்க காற்றின் தரக் குறியீட்டின்படி, நாட்டின் பல பகுதிகளில் காற்றின் தரம் 100 முதல் 150 வரை உள்ளது.

எவ்வாறாயினும், வடக்கு, வடமத்திய, வடமேற்கு மற்றும் மேல் மாகாணங்களின் நகர்ப் புறங்களின் வானிலை தன்மையை பொறுத்து, இந்த மதிப்புகள் மாறக்கூடும் என்று கட்டட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது. (ஐ)

# யாழ்ப்பாணம், திருமலையில் துரிதகதி அபிவிருத்தி திட்டம்!

## அமைச்சர் பிரசன்ன தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 12

**யாழ்ப்பாணம், திருகோணமலை, கொழும்பு, அம்பாந்தோட்டை, ஆகிய மாவட்டங்களில் துரிதமாக அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட பிரிவுகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாக நகர அபிவிருத்தி அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.**



நகர்ப்புற மேம்பாட்டு அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், பௌதீக வள மேம்பாட்டுக்கான நான்கு முக்கிய நகரங்களாக இந்த நகரங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

நான்கு நகரங்களையும் இணைக்கும் வகையில் ஒன்பது பொருளாதாரப் பாதைகள் அடையாளம் காணப்பட்டுள்ளன என்று அமைச்சர் ரணதுங்க தெரிவித்தார்.

அடுத்த எட்டு வருடங்களுக்கான கொழும்பு நகர அபிவிருத்தித் திட்டத்தை வர்த்தமானி ஊடாக நகர அபிவிருத்தி அதிகார சபை ஏற்கனவே வெளியிட்டுள்ள அதேவேளை, நாட்டின் பிரதான வர்த்தக மற்றும் நிதிய கேந்திர நிலையமாக கொழும்பு அடையாளம் காணப்பட்டுள்ளதாக அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இந்த வேலைத்திட்டத்தின் கீழ், பொரளை நகர அபிவிருத்தித் திட்டம் தொகுக்கப்படுகின்ற அதேவேளை, கிரிமண்டல மாவத்தை நகர அபிவிருத்தித் திட்டம் மற்றும் நகர மறுமலர்ச்சி வீடமைப்புத் திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

சர்வதேச மாநாட்டு மண்டபம், துறைமுகம், மத்தள விமான நிலையம், உலர் வலய தாவரவியல் பூங்கா மற்றும் இத்திட்டத்தின் கீழ் அடையாளம் காணப்பட்ட நிர்வாக வளாகம் என்பன ஏற்கனவே பூர்த்தி செய்யப்பட்டுள்ள நிலையில் அம்பாந்தோட்டை நகர அபிவிருத்தித் திட்டம் புதுப்பிக்கப்படும் என அமைச்சு தெரிவித்துள்ளது.

திருகோணமலையை ஒரு பெரிய வர்த்தக நகரமாக அடையாளப்படுத்துவதற்கும், பல உள்ளூராட்சி மன்றங்களை உள்ளடக்கியதற்கும் திருகோணமலை நகர அபிவிருத்தித் திட்டம் தயாரிக்கும் பணிகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதன்படி, திருகோணமலை துறைமுக அபிவிருத்தி, எண்ணெய் முனைய அபிவிருத்தி மற்றும் கப்பல்துறை கைத்தொழில் வலயம் என்பன அபிவிருத்தி செய்யப்படவுள்ளதுடன், சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடன் கலந்தாலோசித்து திட்டங்களை தயாரிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

யாழ் குடாநாட்டுக்கான அபிவிருத்தித் திட்டமும் தயாரிக்கப்பட்டு வருவதாகவும், இத்திட்டத்தின் கீழ் காங்கேசன்துறை நகர அபிவிருத்தி, துறைமுக அபிவிருத்தி, பலாலி விமான நிலைய வசதிகளை விஸ்தரித்தல், கைத்தொழில் மற்றும் தகவல் தொழில்நுட்ப அபிவிருத்தி மற்றும் பல கலப்பு அபிவிருத்தித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட உள்ளதாகவும் அமைச்சர் ரணதுங்க தெரிவித்தார். (ஐ)

# சந்தையில் கிடைக்கும் கோதுமை மா தரமற்றது

## வெதுப்பக உரிமையாளர்கள்

கொழும்பு, டிசெ. 12

சந்தையில் குறைந்த விலையில் கிடைக்கும் கோதுமை மாவு தரமற்றது என்று வெதுப்பக உரிமையாளர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

வெதுப்பக பொருட்களுக்கு நிலையான கட்டுப்பாட்டு விலை இல்லாததால் வெதுப்பக தொழிலில் பல்வேறு பிரச்னைகள் எழுந்துள்ளதாக தென் மாகாண சிறு மற்றும் நடுத்தர அளவிலான வெதுப்பக உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

வெதுப்பக உற்பத்திப் பொருட்களின் விலைகள் மாறுபடுவதால் இந்தத் தொழிலில் பல்வேறு பிரச்னைகள் ஏற்பட்டுள்ளன. கோதுமை மாவின் விலை குறைக்கப்பட்டுள்ள போதிலும் வெதுப்பக உற்பத்தியாளர்கள் தமது உற்பத்திகளின் விலையை குறைப்பது தொடர்பில் கவனம் செலுத்தவில்லை.

எவ்வாறாயினும், சந்தையில் குறைந்த விலையில் கிடைக்கும் கோதுமை மா தரமற்றது என வெதுப்பக உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர். (ஐ)

# ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவராக மீளவும் சஜித்

கொழும்பு, டிசெ. 11

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவராக சஜித் பிரேமதாஸ மீண்டும் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் வருடாந்த மாநாடு பொரளை கெம்பல் மைதானத்தில் நேற்று நடைபெற்றது.

இதன்போதே தலைவர் பதவிக்கு சஜித் பிரேமதாஸ ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டார்.

தவிர, ஐக்கிய மக்கள் சக்தியின் தவிசாளராக சரத் பொன்சேகா, பொதுச்செயலாளராக ரஞ்சித் மத்தும பண்டார, தேசிய அமைப் பாளராக திஸ்ஸ அத்தநாயக்க, பொருளாளராக ஹர்ஷ டி சில்வா, ராஜித சேனாரத்ன, சிரேஷ்ட உப தவிசாளராகவும் பிரதி செயலாளராகவும் வடிவேல் சுரேஷ் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

உமா சந்திரா பிரகாஸுக்கும் பிரதி செயலாளர் பதவி வழங்கப் பட்டுள்ளது.

அத்துடன், நிறைவேற்றுக் குழு உறுப்பினர்களும் நியமிக்கப்பட்டனர். (ஐ)

# தபால் திணைக்கள ஊழியர்கள் நேற்று பணிப் புறக்கணிப்பு!

கொழும்பு, டிசெ. 12

நேற்று மாலை 4 மணி முதல் நாடளாவிய ரீதியில் தபால் திணைக்கள ஊழியர்கள் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

பல்வேறு பிரச்னைகளை முன்வைத்து இந்த பணிப்பகிஷ்கரிப்பு முன்னெடுக்கப்படுகின்றது என்று ஒன்றிணைந்த தபால் தொழிற் சங்கத்தின் இணை ஏற்பாட்டாளர் சிந்தக பண்டார தெரிவித்துள்ளார்.

இந்த பணிப்பகிஷ்கரிப்பு இன்று நள்ளிரவு முதல் முடிவுக்கு வந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# உள்ளூராட்சி தேர்தல் வேட்புமனு இம்மாத இறுதியில் அறிவிப்பேன்!

## முடிவு மாறாது என்கிறார் தேர்தல்கள் ஆணையாளர்

கொழும்பு, டிசெ. 12

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வேட்பு மனு தாக்கல் தொடர்பில் இந்த மாத இறுதியில் அறிவிப்பதற்கு எடுக்கப்பட்ட தீர்மானத்தில் எவ்வித மாற்றமும் இல்லை. புத்தாண்டுக்கு முன்னர் இது குறித்த அறிவித்தல் நிச்சயம் வெளியிடப்படும் என்று தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார்.

கடந்த வியாழக்கிழமை தேர்தல் ஆணைக்குழுவில் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலின் போது இம்மாதம் இறுதி வாரத்தில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வேட்பு மனு தாக்கல் தொடர்பில் அறிவிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது.

அதற்கமைய பெப்ரவரி இறுதி வாரத்தில் தேர்தல் நடத்தப்படும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. எவ்வாறிருப்பினும் ஆணைக்குழு வேட்புமனு தாக்கலுக்கான தினத்தை அறிவிப்பதற்கு முன்னர் மீண்டும் தேர்தலை காலம் தாழ்த்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது. இது தொடர்பில் வினவிய போதே தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா இவ்வாறு தெரிவித்தார்.

மேலும், எம்மால் கடந்த வாரம் அறிவிக்கப்பட்டமைக்கமைய உரிய நேரத்தில் நிச்சயம் வேட்புமனு தாக்கலுக்கான தினம் அறிவிக்கப்படும். அந்த தீர்மானத்தில் எவ்வித மாற்றமும் கிடையாது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை உரிய காலத்திற்குள் நடத்த வேண்டும் என்பதே எமது நிலைப்படாகும். தேர்தலை நடத்துவதற்கு எக்காரணியும் தடையாக இல்லை. மார்ச் 20 ஆம் திகதிக்கு முன்னர் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்தி முடிக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே தேர்தல் ஆணைக்குழு உள்ளது.

அதற்கமையவே ஜனவரி முதலாம் திகதிக்கு முன்னர் அது குறித்த உத்தியோகபூர்வ அறிவிப்பை வெளியிட தீர்மானிக்கப்பட்டது. இவ்வாறு உத்தியோகபூர்வ அறிவிப்பு விடுக்கப்பட்டதன் பின்னர் ஜனவரியில் வேட்புமனு தாக்கல் இடம்பெறும். அதனைத் தொடர்ந்து பெப்ரவரி மாத இறுதியில் தேர்தல் நடத்தப்படும் - என்றார். (ஐ)

## மோசமான காலநிலையிலும்

# சிவனொளிபாத மலைக்கு அதிக பக்தர்கள் வருகை!

ஹற்றன், டிசெ. 11

வார விடுமுறை நாட்களில் மோசமான காலநிலையையும் பொருட்படுத்தாமல் அதிகளவான யாத்ரிகர்கள் சிவனொளி பாத மலையின் ஸ்ரீ பாதத்தை தரிசிக்க செல்கின்றனர்.

இலங்கையின் பல்வேறு பகுதிகளில் இருந்து புகையிரதங்களில் அதிகளவான பக்தர்கள் செல்கின்றனர்.

பதுளையில் இருந்து செல்லும் புகையிரதத்தில் 90 சதவீத மானவர்கள் சிவனொளிபாத மலை செல்லும் பக்தர்களாக உள்ளனர் என்று புகையிரத நிலைய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஹற்றன் புகையிரத நிலைய அதிகாரி ஒருவர் தெரிவிக்கையில், ஹற்றன் புகையிரத நிலையத்துக்கு ரயிலில் வரும் பக்தர்கள் சிவனொளிபாதமலை தரிசனத்துக்கே கடந்த சில நாட்களாக வருகின்றனர். இவர்களுக்காக பல வசதிகள் செய்யப்பட்டுள்ளன என்றும் அவர் கூறினார். (ஐ)

# வெளிநாட்டுக்கு ஆட்கள் கடத்தல் ஓமான் பறந்தது விசாரணை குழு!

கொழும்பு, டிசெ. 12

ஆட்கடத்தல் சம்பவங்கள் தொடர்பில் விசாரணைகளுக்காக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் மற்றும் குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் பிரதிநிதிகள் அடங்கிய குழுவொன்று ஓமான் சென்றுள்ளது.

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த நாட்களில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்திய ஓமானுக்கான ஆட்கடத்தல் சம்பவங்கள் தொடர்பில் விசாரணை நடத்துவதற்கு தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்காரவின் பணிப்புரையின் பேரில் இந்த குழு நேற்று புறப்பட்டுச் சென்றுள்ளது.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் மேலதிக பொது முகாமையாளர், மூன்று விசாரணை அதிகாரிகள் மற்றும் ஒரு பொலிஸ் பரிசோதகர் மற்றும் குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் ஒரு பெண் உப பொலிஸ் பரிசோதகர் ஆகியோர் இந்தக் குழுவில் உள்ளடங்குகின்றனர்.

இதேவேளை, வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியக சட்டத்தை மீறி வெளிநாடுகளுக்கு அனுப்பப்பட்டவர்கள் தொடர்பில் அண்மைய நாட்களில் பதிவான சம்பவங்கள் தொடர்பில் விசேட விசாரணைகள் மேற்கொள்ளப்படும் எனவும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் அறிவித்துள்ளது. (ஐ)

# குஜராத், இமாச்சல பிரதேச தேர்தல் முடிவுகள் உணர்த்துவது என்ன?

**- முரளிதரன் காசி விஸ்வநாதன்**

இந்தியாவில் குஜராத் மாநிலத்தில் வரலாறு காணாத வெற்றியைப் பெற்றுள்ளது பா.ஜ.க. இமாச்சல பிரதேசத்தில் ஆட்சி மாற்றம் நடந்திருக்கிறது. இடைத்தேர்தல்களில் பல இடங்களில் பா.ஜ.க. தோல்வியைச் சந்தித்திருக்கிறது. இந்தத் தேர்தல் முடிவுகள் சொல்வதென்ன?

நடந்து முடிந்திருக்கும் குஜராத் மாநில சட்டமன்றத் தேர்தலில் பா.ஜ.க. நிஜமாகவே ஒரு வரலாறு காணாத வெற்றியைப் பெற்றிருக்கிறது. 182 இடங்களைக் கொண்ட குஜராத் சட்டமன்றத்தில் 156 இடங்களில் வெற்றி பெற்றிருக்கிறது.

காங்கிரசுக்கு 17 இடங்களும் ஆம் ஆத்மி கட்சிக்கு ஐந்து இடங்களும் கிடைத்திருக்கின்றன. நரேந்திர மோதி முதலமைச்சராக இருந்தபோதுகூட, பா.ஜ.க. 127 இடங்களைத்தான் வெல்ல முடிந்தது.

இதற்கு முன்பாக, இந்திரா காந்தி இறந்த பிறகு நடந்த 1985ஆம் ஆண்டு தேர்தலில் முதலமைச்சர் மாதவ்சிங் சோலங்கி தலைமையில் தேர்தலைச் சந்தித்த காங்கிரஸ் கட்சி 149 இடங்களைப் பிடித்தது.

தற்போதுவரை, குஜராத்தில் ஒரு கட்சி அதிக அளவு இடங்களைக் கைப்பற்றியது அப்போதுதான். இதற்குப் பிறகு, 1995ல் பா.ஜ.க. ஆட்சியைக் கைப்பற்றியது. அப்போதிலிருந்து தற்போது 7வது முறையாக குஜராத்தில் தொடர்ந்து வெற்றி பெற்று வருகிறது பா.ஜ.க.

இந்தியத் தேர்தல் ஆணையத்தின் தரவுகளின்படி, பாஜக 52.5 சதவீத வாக்குகளைப் பெற்றிருக்கிறது. கடந்த முறை 40 சதவீத வாக்குகளைப் பெற்றிருந்த காங்கிரஸ் கட்சி இந்த முறை 27.3 சதவீத வாக்குகளையே பெற்றிருக்கிறது. பல காங்கிரஸ் தலைவர்கள் தோல்வியடைந்துள்ளார்கள்.

கடந்த 27 ஆண்டுகளாக ஆட்சியில் இருந்துவரும் பா.ஜ.க. சில ஆண்டுகளுக்கு முன்பாகவே 2022ஆம் ஆண்டுத் தேர்தலுக்குத் தயாராகத் துவங்கிவிட்டது. இதற்கு முன்பு முதல்வராக இருந்த விஜய் ரூபாணி மாற்றப்பட்டு, கடந்த ஆண்டு செப்டம்பரிலேயே பூபேந்திர படேல் முதல்வராக்கப்பட்டார்.

இதன் மூலம் சில ஆண்டுகளுக்கு முன்பாக போராட்டத்தில் இறங்கிய பட்டிதார் சமூகத்தை சமாதானம் செய்தது. அமைச்சரவையிலும் எல்லா சமூகத்தினரும் இடம்பெறுவது போல பார்த்துக்கொண்டது. பிறகு, கட்சியின் மாநிலத் தலைவர் மாற்றப்பட்டார்.

பா.ஜ.க. இவ்வளவு தீவிரமாக பணியாற்றிக்கொண்டிருந்த நிலையில், காங்கிரஸ் மிகச் சாவதானமாகவே இந்தத் தேர்தலை எதிர்கொண்டது. உள்ளூர் பிரச்னைகளை முன்னிறுத்தி, நல்ல வேட்பாளர்களைப் போட்டியிடச் செய்தால் போதும் எனக் கருதியது.

மேலும் கீழ் மட்டத்தில், வீடு வீடாகச் சென்று பிரசாரம் செய்வதில் கவனம் செலுத்தியது. ஆனால், கடைசி நேரத்தில் முன்னெடுத்த இந்த முயற்சிகள் பெரிய அளவில் பலனளிக்கவில்லை. அதோடு கடந்த தேர்தலில் 77 இடங்களைப் பெற்றிருந்த காங்கிரஸ், சட்டமன்றத் தேர்தல் நெருங்கியபோது 56 எம்.எல்.ஏக்களுடன் சுருங்கிப் போயிருந்தது. மீதமுள்ளவர்கள் பா.ஜ.கவுக்குச் சென்றுவிட்டனர்.





இமாச்சல பிரதேசத்தைப் பொறுத்தவரை, 1985க்கு ஒரு முறை ஆட்சியைப் பிடித்த கட்சி மறுமுறை வெற்றி பெற்றதில்லை. இப்போது நடந்து முடிந்திருக்கும் தேர்தலில் காங்கிரஸ் கட்சிக்கு 40 இடங்களும் பா.ஜ.கவுக்கு 25 இடங்களும் கிடைத்திருக்கின்றன. மூன்று சுயேட்சைகள் வெற்றி பெற்றிருக்கிறார்கள். அதில் இருவர் பா.ஜ.கவின் அதிருப்தி வேட்பாளர்கள். ஒருவர் காங்கிரஸின் அதிருப்தி வேட்பாளர். 2012இல் ஆட்சியைப் பிடித்தபோது, 36 இடங்களை வென்ற காங்கிரஸ் இந்த முறை கூடுதலாக 4 இடங்களைப் பிடித்திருக்கிறது.

இந்த மாநிலத்திலும் மோதி தீவிரப் பிரசாரம் மேற்கொண்டிருந்தாலும், இமாச்சல பிரதேசத்தில் இந்தத் தேர்தலில் பல உள்ளூர் பிரச்னைகள் ஆதிக்கம் செலுத்தின. வேலைவாய்ப்பின்மை, ஆப்பிள் விவசாயிகள் பிரச்னை போன்றவை இங்கே ஆதிக்கம் செலுத்தின. இமாச்சல பிரதேசத்தில் மொத்தமுள்ள 68 தொகுதிகளில் 18 தொகுதிகளில் ஆப்பிள் விவசாயிகளுக்கு செல்வாக்கு இருந்தது.

இங்கு விளையும் ஆப்பிள்களை சில பெருநிறுவனங்கள் குறைந்த விலைக்கு வாங்குவது தொடர்பாக விவசாயிகளிடம் குமுறல் இருந்து வந்தது. விவசாயிகள் கடந்த ஆகஸ்ட் மாதம் இது தொடர்பான போராட்டம் ஒன்றையும் நடத்தினர்.

இந்த நிலையில், தாங்கள் ஆட்சிக்கு வந்தால், ஆப்பிள் விவசாயிகளை உறுப்பினர்களாகக் கொண்டு தோட்டக்கலை வாரியம் ஒன்றை அமைத்து, ஆப்பிளுக்கான விலை நிர்ணயம் செய்யப்படும் என்றும் அதைவிட குறைந்த விலைக்கு வாங்குவதற்கு எவ்வளவு பெரிய நிறுவனமாக இருந்தாலும் அனுமதிக்கப்பட மாட்டாது என்றும் தனது தேர்தல் அறிக்கையில் காங்கிரஸ் கூறியது. அதற்கு நல்ல பலன் கிடைத்திருப்பது போலத்தான் தெரிகிறது.

இமாச்சால பிரதேசத்தைப் பொறுத்தவரை, காங்கிரசுக்கு கிடைத்த வெற்றி என்பது குஜராத்தில் பா.ஜ.கவுக்குக் கிடைத்த வெற்றியோடு ஒப்பிடத்தக்கதல்ல என்றாலும்கூட, மிகவும் குறிப்பிடத்தக்கது. அக்கட்சியின் பொதுச் செயலாளர் ஜெய்ராம் ரமேஷ் குறிப்பிட்டதைப் போல, ‘இமாச்சல பிரதேச தேர்தல் முடிவுகள் காங்கிரசுக்கு மனரீதியாக நிச்சயமான ஒரு ஊக்கம்”தான்.

ஆனால், இந்திய ஊடகங்களிலும் சமூக ஊடகங்களிலும் குஜராத்தின் வெற்றியே மிகப் பெரியதாகப் பேசப்படுவதோடு, விவாதிக்கப்பட்டும் வருகிறது. சாதாரணமான ஒரு சூழலில், இது பா.ஜ.கவின் இழப்பாகக் கருதி விவாதிக்கப்பட்டிருக்கும். ஆனால், அப்படி நடக்கவில்லை. குஜராத்தில் காங்கிரஸ் அடைந்த படுதோல்வியே தீவிர விவாதத்திற்கு உள்ளானது.

‘ஒரு மாநிலத்தில் மட்டும் கிடைத்த வெற்றி, எப்படி பிற தோல்விகளுக்கெல்லாம் ஈடாகுமெனப் புரியவில்லை. இன்று நடந்த இடைத்தேர்தல்களில் பா.ஜ.கவுக்குக் கிடைத்த தோல்வியைப் பற்றி யாரும் பேசுவதில்லை. எந்த ஊடகமும் விவாதிப்பதில்லை.

குறிப்பாக உத்தர பிரதேசத்தில் ஒரு நாடாளுமன்றத் தொகுதியில் பா.ஜ.க. தோல்வியடைந்திருக்கிறது. இது பேசு பொருளாகவே இல்லை” எனச் சுட்டிக் காட்டுகிறார் மூத்த பத்திரிகையாளரான ஏ.எஸ். பன்னீர்செல்வன்.

குஜராத், இமாச்சல பிரதேச தேர்தல்க ளோடு சேர்ந்து பல மாநிலங்களில் உள்ள ஆறு சட்டமன்றத் தொகுதிகளுக்கும் ஒரு நாடாளுமன்றத் தொகுதிக்கும் இடைத் தேர்தல் நடைபெற்றது. பிஹாரின் குர்ஹனி, சட்டீஸ்கரின் பானுபிரதாப்பூர், ஒடிசாவின் பாதாம்பூர், ராஜஸ்தானின் சர்தார்ஷஹர், உத்தர பிரதேசத்தின் கடௌலி, ராம்பூர் ஆகிய ஆறு சட்டமன்றத் தொகுதிகளுக்கு நடந்த தேர்த லில் குர்ஹினியிலும் ராம்பூரிலும் மட்டுமே பா.ஜ.கவால் வெற்றிபெற முடிந்தது.

உத்தரப்பிரதேசத்தின் மைன்புரி நாடாளுமன்றத் தொகுதிக்கு நடந்த தேர்தலில் சமாஜ்வாதி கட்சியின் வேட்பாளர், பா.ஜ.க. வேட்பாளரைவிட இருமடங்கு வாக்குகள் அதிகம் பெற்று வெற்றி பெற்றிருக்கிறார்.

‘முதலில் மேற்கு வங்கத்தில் தோல்வி, பிறகு டெல்லி மாநகராட்சியில் தோல்வி, இப்போது இமாச்சல பிரதேசம், இடைத் தேர்தல்கள் ஆகியவற்றில் தோல்வி என பா.ஜ.கவின் தோல்விகள் தொடர்கின்றன. ஆகவே, பா.ஜ.க. ஒன்றும் தோற்கடிக்க முடியாத கட்சியில்லை என்பது தெரிந்துவிட்டது. 2024ஆம் ஆண்டு தேர்தலை நம்பிக்கையுடன் எதிர்க்கட்சிகள் எதிர்கொள்ளலாம் என்பதுதான் இந்தத் தேர்தலில் இருந்து தெரிய வந்திருக்கும் செய்தி,” என்கிறார் பன்னீர் செல்வன்.

குஜராத்தைப் பொறுத்தவரை, காங்கிரசின் மோசமான பிரசாரம்தான் அக்கட்சியின் படுதோல்விக்குக் காரணமா?

அந்தக் கூற்றை மறுக்கிறார் பன்னீர் செல்வன். ‘காங்கிரசால் இதற்கு மேல் எதுவும் செய்ய முடியுமெனத் தோன்றவில்லை. பாலம் இடிந்து விழுந்த மோர்பியில் பா.ஜ.க. பெரும் வெற்றி பெறுகிறது. அதேபோல, பில்கிஸ் பானு விவகாரம் குறித்து மிக மோசமாகப் பேசிய தலைவர் வெற்றி பெறுகிறார். இந்த நிலையில், அங்கு காங்கிரஸ் செய்யக்கூடியது ஏதும் இருப்பதாகத் தெரியவில்லை,” என்கிறார் அவர்.

ஆனால், குஜராத்தில் கிடைத்த வெற்றியை வைத்து பிற மாநிலங்களை பா.ஜ.க. புரிந்துகொண்டால் அது தவறாகத்தான் முடியும் என்பதுதான் தற்போது இமாச்சல பிரதேசத்தில் கிடைத்திருக்கும் வெற்றி உணர்த்துகிறது என்கிறார்.

பன்னீர்செல்வன் சொல்வதும் ஒருவகையில் சரியாகவே அமைந்தது. இமாச்சல பிரதேச தேர்தலில், தேசப் பாதுகாப்பு, இரட்டை எஞ்சின் அரசு, பொது சிவில் சட்டம் போன்றவற்றை முன்னிறுத்தியே பா.ஜ.க. பிரசாரத்தை மேற்கொண்டது. ஒட்டுமொத்தப் பிரசாரமும் பிரதமர் மோதியின் இமேஜை முன்னிறுத்தி நடைபெற்றது. ஆனால், காங்கிரஸ் உள்ளூர் பிரச்னைகளை முன்வைத்து, அவற்றைத் தன் தேர்தல் அறிக்கைகளில் எதிரொலித்தது. அதற்குப் பலன் கிடைத்திருக்கிறது.

ஆனால், குஜராத்தில் காங்கிரசுக்குக் கிடைத்திருக்கும் தோல்வி அக்கட்சிக்கு மிகப் பெரிய பின்னடைவுதான் என்கிறார் தி இந்து குழுமத்தின் இயக்குநர்களில் ஒருவரும் மூத்த பத்திரிகையாளருமான என். ராம். **(09 ஆம் பக்கம் பார்க்க...)**



# ஆறுமுகநாவலர் அவதரித்து
## 200 ஆண்டு நிறைவு மாநாடு 2022

**ய. அநிருத்தனன்**
பணிப்பாளர்,
இந்து சமய கலாசார
அலுவல்கள் திணைக்களம்

சிறிலசிறி ஆறுமுகநாவலர் பெருமான் திருவவதாரம் செய்து இருநூறாவது ஜனன ஆண்டிலே, இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் சிறப்புமிகு ஏற்பாட்டிலும் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம், சிறிலசிறி ஆறுமுகநாவலர் சபை, யாழ். மாநகரசபை சமய விவகாரக் குழு ஆகியவற்றின் இணை ஏற்பாட்டில் எதிர்வரும் டிசம்பர் மாதம் 14, 15, 16 17 மற்றும் 18 ஆம் திகதிகளில் நாவலர் பெருமான் அவதரித்த - நாளைக் கந்தன் திருவீதியுலா வரும் புனித பதியிலே சிறிலசிறி ஆறுமுகநாவலர் மாநாடு நிகழ்ந்தேறவுள்ளது. நாவலர் பெருமானின் குருபூஜை நன்னாளிலே ஆரம்பமாகி ஜனன தின நாளிலே நிறைவு காணவுள்ள இம் மாநாடு நிகழ்வுகள் நல்லூர்ப் பதியிலே நாவலர் மணிமண்டபம், நாவலர் கலாசார மண்டபம், சிறி துர்க்கா மணிமண்டபம், நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக் கலா மண்டபம் ஆகிய இடங்களிலே ஆன்மிக அரங்கு, பொது அரங்கு, ஆய்வரங்கு என நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

### ஆன்மிக அரங்கு நிகழ்வுகள்

சிறிலசிறி ஆறுமுக நாவலர் மணிமண்டபத்திலே ஆன்மிக அரங்கின் தொடக்க நிகழ்வுகள் 14.12.2022 அன்று காலை 7.30 மணிக்கு குருபூஜை நிகழ்வுகளோடு ஆரம்பமாகவுள்ளன. அதனைத் தொடர்ந்து நாவலர் பெருமானின் வரலாற்றைச் சித்திரிக்கின்ற ஓவியங்களும் நாவலர் பெருமானால் நம் சமூகத்திற்குத் தரப்பட்ட படைப்புகளும் உள்ளடங்கிய கண்காட்சி நிகழ்வின் அங்குரார்ப்பண வைபவமும் இடம்பெறவுள்ளது.

காலை 8.00 மணிக்கு நாவலர் பெருமானின் திருவுருவப் படம் தாங்கிய திருவூர்வல நிகழ்வு சிறிலசிறி ஆறுமுகநாவலர் மணிமண்டபத்திலிருந்து நாவலர் வீதியில் அமைந்துள்ள நாவலர் கலாசார மண்டபம் நோக்கிப் பவனிவரவுள்ளது.


நாவலர் கலாசார மண்டபத்திலே, பெயர்ப் பலகைத் திரை நீக்கத்தினைத் தொடர்ந்து சிறிலசிறி ஆறுமுகநாவலர் பெருமான் அவர்களுக்கான குருபூஜை நிகழ்வுகளோடு ஆன்மிக அரங்கின் அரங்க நிகழ்வுகள், நல்லை ஆதீன முதல்வர் வணக்கதிற்குரிய சிறிலசிறி சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள் மற்றும் சர்வதேச இந்துக் குருமார் ஒன்றியத் தலைவர் வணக்கத்திற்குரிய து.கு.ஜெகதீஸ்வரக் குருக்கள் ஆகியோர் திருமுன்னிலை வகிக்க, இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் திரு.ய.அநிருத்தனன் அவர்கள் தலைமையில், யாழ்.மாநகர முதல்வர் வி.மணிவண்ணன் அவர்கள் பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பிக்க நிகழ்வுகள் அரங்கேறவுள்ளன.

சமயப் பெரியார்கள், கல்விமான்கள், அறநெறிப் பாடசாலைச் சமூகத்தினர் எனப் பலரும் பங்கெடுக்கவுள்ள இந்நிகழ்வில் 'நாவலர் சைவக்காவலர்" எனும் தலைப்பிலான செஞ்சொற்செல்வர். கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்களின் சிறப்புரை, நூல் வெளியீடு மற்றும் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகள் ஆகியவை நாவலர் கலாசார மண்டபத்திலே ஆன்மிக அரங்கில் நிகழ்ந்தேறவுள்ளன.

### பொது அரங்கு நிகழ்வுகள்

நல்லூர், சிறி துர்க்காதேவி மணிமண்டபத்திலே, ஐந்து நாட்கள் மாலை நேர நிகழ்வுகளாகப் பொது அரங்கு நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. மாலை 5.00 மணி தொடக்கம் 7.00 மணி வரை நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

பொது அரங்கின் முதலாம் நாள் நிகழ்வு அமெரிக்கா, ஹவாய் சைவ ஆதீன சிவாய சுப்பிரமுனிய சுவாமிகளின் சீடர் வணக்கத்திற்குரிய ஆன்மிகச் சுடர் ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள் அவர்களும் சிலாபம், முன்னேஸ்வரம் தேவஸ்தானத்தின் பிரதம குரு வணக்கத்திற்குரிய சிவசிறி ச.பத்மநாப சர்மா அவர்களும் திருமுன்னிலை வகிக்க, வடக்கு மாகாணப் பிரதிப் பிரதம செயலாளர் திரு.அ.உமாமகேஸ்வரன் அவர்கள் தலைமையில் இந்தியத் துணைத் தூதுவர் ராகேஷ் நட்ராஜ் அவர்கள் பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பிக்க, கனடா- சைவசித்தாந்த பீட இயக்குநர் வைத்திய கலாநிதி இ.லம்போதரன் அவர்களின் சிறப்புரை, நூல் வெளியீடு, யாழ் பல்கலைக்கழக, இராமநாதன் நுண்கலைப் பீட இசைத் துறைச் சிரேஷ்ட விரிவுரையாளர் திரு. பரந்தாமன் நவரட்ணம் அவர்களின் பண்ணிசைக் கச்சேரி முதலான கலை நிகழ்வுகளும் அரங்கேறவுள்ளன.



பொது அரங்கின் இரண்டாம் நாள் நிகழ்வு வேதாந்தமடம், சிவகுருநாத பீட எட்டாவது குருபீடாதிபதி வணக்கத்திற்குரிய சிறி வேதவித்தியா சாகரர் சுவாமிகள் மற்றும் சண்டிலிப்பாய் சிறி சரஸ்வதி கோயில் பிரதம குரு வணக்கத்திற்குரிய சிவசிறி சபா. வாசுதேவக் குருக்கள் ஆகியோர் திருமுன்னிலை வகிக்க, புனர்வாழ்வு மற்றும் மீள் குடியேற்ற அமைச்சின் முன்னாள் செயலாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன் அவர்கள் தலைமையில் யாழ்.மாவட்டச் செயலாளர் திரு.க.மகேசன் அவர்கள் பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பிக்க, உலகப் புகழ் பெற்ற ஓவியர் மு.பத்மவாசன் அவர்களின் சிறப்புரை, நூல் வெளியீடு, நாட்டிய கலாகேந்திரா நடனப் பள்ளி இயக்குநர் திருமதி துஷ்யந்தி சுகுணன் அவர்களின் நெறியாள்கையில் அறுசமய ஆராதனை- நாட்டிய நாடகம் முதலான கலை நிகழ்வுகளும் அரங்கேறவுள்ளன.

பொது அரங்கின் மூன்றாம் நாள் நிகழ்வு, யாழ்ப்பாணம், சின்மயா மிஷன் வணக்கத்திற்குரிய குணாதிதானந்த சரஸ்வதி சுவாமிகள் மற்றும் சுண்ணாகம், கதிரமலைச் சிவன் தேவஸ்தானத்தின் பிரதம குரு வணக்கத்திற்குரிய முத்தமிழ்க் குருமணி நா.சர்வேஸ்வரக் குருக்கள் ஆகியோர் திருமுன்னிலை வகிக்க, கல்வி அமைச்சின் முன்னாள் மேலதிகச் செயலாளர், கலாகீர்த்தி உடுவை.எஸ்.தில்லை நடராஜா அவர்களின் தலைமையில், வவுனியா பல்கலைக் கழகத் துணை வேந்தர் பேராசிரியர் தம்பு மங்களேஸ்வரன் அவர்கள் பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பிக்க, தமிழ்நாடு, சென்னை, சிறி நடேசன் வித்தியாசாலை மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி நிறுவுநர், டாக்டர். ந. இராமசுப்பிரமணியன் அவர்களின் சிறப்புரை மற்றும் கம்பவாரிதி இ.ஜெயராஜ் அவர்களின் தலைமையிலான பட்டிமன்ற நிகழ்வுகளும் அரங்கேறவுள்ளன.

பொது அரங்கின் நான்காம் நாள் நிகழ்வு, திருக்கேதீஸ்வரம், தருமபுர ஆதீனத்தின் கிளை மடத்தின் வணக்கத்திற்குரிய சிறிமத் மீனாட்சி சுந்தரதம்பிரான் சுவாமிகள் மற்றும் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் பிரதம குரு வணக்கத்திற்குரிய மகாராஜாதி து.ஷ. ரத்தினசபாபதிக் குருக்கள் ஆகியோர் திருமுன்னிலை வகிக்க, யாழ்ப்பாணம் மாநகர சபை ஆணையாளர் திரு.த.ஜெயசீலன் அவர்கள் தலைமையில், யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் எஸ். சிறிசற்குணராஜா அவர்கள் பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பிக்க, தமிழ்நாடு, சிதம்பரம், தவத்திரு ஆறுமுகநாவலர் சைவ வித்தியாசாலை அறக் கட்டளையின் தலைவர் டாக்டர்.சு. அருள்மொழிச் செல்வன் அவர்களின் சிறப்புரை, நூல் வெளியீடு, இசைச் சுடர்கள் அ.அமிர்தலோஜன், அ.அமிர்தசிந்துஜன் ஆகியோர் இணைந்து வழங்கும் நாவலர் கீர்த்தனைகள் - இசை அரங்கம் மற்றும் யாழ் பல்கலைக் கழக இராமநாதன் நுண்கலைப் பீட, நடனத்துறை மாணவர்கள் வழங்கும் திருமதி மைதிலி அருளையா அவர்களின் நெறியாள்கையில் நாவலர் பெருமான் - நாட்டிய நாடகம் முதலான கலை நிகழ்வுகளும் அரங்கேறவுள்ளன.

பொது அரங்கின் நிறைவு நாள் நிகழ்வு, நல்லை ஆதீன முதல்வர் வணக்கதிற்குரிய சிறிலசிறி சோமசுந்தரதேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள் மற்றும் சர்வதேச இந்து மத பீடச் செயலாளர் இராமச்சந்திரக் குருக்கள் பாபு சர்மா ஆகியோர் திருமுன்னிலை வகிக்க, இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் திரு.ய.அதிருத்தனன் அவர்களின் தலைமையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வேந்தர் பேராசிரியர். சி.பத்மநாதன் அவர்கள் பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பிக்க, நர்த்தன ஷேத்திரா நடனப் பள்ளி மாணவர்கள் திருமதி பிரியதர்ஷினி வாசிகள் அவர்களின் நெறியாள்கையில் வள்ளி திருமணம் - நாட்டிய நாடகம், அண்ணாமலைப் பல்கலைக்கழக உதவிப் பேராசிரியர் திரு.தி. பாலச்சந்தர் அவர்களின் பண்ணிசை முதலான கலை நிகழ்வுகளோடு விருது வழங்கல் வைபவமும் இடம்பெற வுள்ளது.

### கருத்தரங்கு நிகழ்வுகள்

சிறிலசிறி ஆறுமுகநாவலர் மாநாடு நிகழ்வின் கருத்தரங்கம் நல்லை திருஞானசம்பந்தர் ஆதினம் கலா மண்டபத்தில் 15,16,17 ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளது. கருத்தரங்கத்தின் முதலாம் நாள் நிகழ்வு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தகைசார் பேராசிரியர் கோபாலகிருஷ்ணால் அவரிகள் தலைமையில் இடம்பெறவுள்ளது. தொடக்கவுரையினை யாழ் பல்கலைக்கழக வேந்தர் பேராசிரியர் சி.பத்மநாதன் அவர்கள் நிகழ்த்த சைவப்பணியில் நாவலர் என்னும் தலைப்பிலான கருத்துரைகள் இடம்பெறவுள்ளன,

இரண்டாம் நாள் கருத்தரங்கு யாழ்.பல்கலைக் கழகத் தமிழ்த் துறையின் முன்னாள் தலைவர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா அவர்கள் தலைமையில் தாவலரின் தமிழ்ப்பணி என்னும் தலைப்பிலான கருத்துரைகள் இடம்பெறவுள்ளன,

கருத்தரங்கில் நிறைவு நாள் வைபவம் யாழ்.பல்கலைக்கழகத் தமிழ்த் துறையின் முன்னாள் தலைவர் பேராசிரியர் அ. சண்முகதாஸ் அவர்களின் தலைமையில் நாவலரின் சமூகப் பணி என்னும் தலைப்பிலான கருத்துரைகள் இடம்பெறவுள்ளன

### நாவலர் புகழ் விருதும் விசேட கௌரவமும்

நாவலர் ஆண்டிலே நடைபெறும் இந்த மாநாட்டு நிகழ்விலே துறைசார்ந்த ரீதியில் கம்பவாரிதி இ.ஜெயராஜ், செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன், வைத்தியகலாநிதி இ.லம்போதரன், உலகப்புகழ் பெற்ற ஓவியர் மு.பத்மவாசன் ஆகியோருக்கு நாவலர் புகழ் விருதும் - ஆன்மிகச் சுடர் ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள் மற்றும் இந்தியா, தமிழ் நாட்டைச் சேர்ந்த டாக்டர். த.இராமசுப்பிரமணியன், டாக்டர். கூ.அருள்மொழிச்செல்வன் ஆகியோர் நாவலர் புகழ் விசேட கௌரவம் மூலம் கௌரவிக்கப்படவுள்ளனர்.

நாவலர் பெருமானை நினைவு கூர்ந்து நாவவர் ஆண்டிலே நிகழவுள்ள இம் மாநாட்டு நிகழ்விலே பங்குகொள்ள அனைவரையும் இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம் மற்றும் நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் சார்பாக அன்போடு வரவேற்கின்றோம்!

## குஜராத், இமாச்சல பிரதேச தேர்தல்...



(08 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

'குஜராத் ஒரு முக்கிய மான மாநிலம். அங்கு சில ஆண்டுகளுக்கு முன்பாக வலுவாக இருந்த காங்கிரஸ் இப்போது படுதோல்வியைச் சந்தித்தி ருக்கிறது. இதை அக்கட்சி கவனிக்க வேண்டும்," என்கிறார் என். ராம்.

இந்தத் தேர்தலில் குஜராத்தில் ஆம் ஆத்மி கட்சிக்குக் கிடைத்த வெற்றியும் கவனிக்கத்தக்கது. பா.ஜ.கவுக்கு இணையாக தீவிரப் பிரசாரத்தை நடத்தி யது ஆம் ஆத்மி கட்சி. 'அந்தக் கட்சியின் வெற்றி அஞ்ச வைக்கிறது. அவர்களிடம் எந்த அரசியலும் இல்லை. எந்த உரிமைப் போராட்டமும் இல்லை. இது அபாயகரமானதாகப்படுகிறது." என்கிறார் பன்னீர்செல்வன்.

நாடு முழுவதுமுள்ள பா.ஜ.கவினர் குஜராத்தில் கிடைத்த வெற்றியை முன்வைத்தே கொண்டாடி வருகின்றனர். ஆனால், டெல்லியிலும் இமாச்சல பிரதேசத்திலும் அக்கட்சிக்குக் கிடைத்திருக்கும் தோல்வி அபாய மணியை ஒலிக்கச் செய்யக்கூடும்.


தேர்தல் வெற்றிக்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுக்கும் பா.ஜ.க. உடனடியாக இந்தத் தோல்விகள் குறித்து ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கும் என்பதில் சந்தேகமில்லை. ஆனால், எதிர்க்கட்சிகளால் 2024இல் பா.ஜ.கவுக்கு எதிராக ஒன்றிணைந்து வலுவான சக்தியாக நிற்க முடியுமா என்பதுதான் இப்போதுள்ள கேள்வி.


(பிபிசி)

# புலமைச் சிகரம்


## தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

37.  சம பக்க வடிவமான அறுகோண வடிவம் காணப்படுகின்றது. இதனை அமைக்கப் பொருத்தமான கம்பித் துண்டுகள் எது?



1) 2) 3)


38.  காட்டப்பட்டுள்ள திசையில் இருந்து பார்க்கும்போது தோன்றும் விதம் யாது?




1) 2) 3)

39. 3 * 4 # 3 = 15 இங்கு * # ஆகிய குறியீட்டைக் காட்டும் சரியான கணித குறியீட்டினைக் காட்டும் விடை யாது?

1) x , + 2) + , x 3) x , -

40. 



1) 2) 3)

**01) பின்வரும் பந்தியை வாசியுங்கள்.**

காலிக்கோட்டையானது போர்த்துக்கேயரால் அமைக்கப்பட்ட மிகப் பழைமையான கோட்டையாகும். இது பார்ப்பதற்கு கம்பீரமாக இருந்தது. அதன் நுழைவாயில் வழியாக உள்ளே நுழைந்தோம். அங்கே புராதன ஆயுதங்கள், பல்வேறு கடைத்தொகுதிகள் என்பன காணப்பட்டன. அவற்றைப் பார்வையிட்டபடியே கோட்டையின் மேற்பகுதிக்கு வந்தோம். ஆகா! மதிலின் மேல் மோதும் கடலலையின் அழகே அழகுதான்! காலி நகரின் அழகு எம்மைப் பரவசப்படுத்தியது.

**பந்தியைத் துணையாகக் கொண்டு விடை எழுதுக.**

i) பார்ப்பதற்கு கம்பீரமாக இருந்தது எது? ..........

ii) "நவீன" என்பதன் எதிர்க்கருத்து யாது? ..........

iii) அ∴றிணை, படர்க்கை, பன்மை வினைச்சொல் ஒன்று எழுதுக.

..........

iv) "எழில்" என்ற சொல்லின் ஒத்தகருத்துச் சொல்லை எழுதுக. ..........

v) எம்மைப் பரவசப்படுத்தியது எது? ..........

vi) இடப்பெயர் ஒன்று எழுதுக. ..........

(6 புள்ளிகள்)

**02)** அ∴றிணை நிகழ்கால பன்மை வினைச்சொல்லைத் தெரிவுசெய்து அதன் கீழே கோடிடுக.

i) பறந்தன ii) குடிக்கின்றது iii) விழுகின்றன

(1 புள்ளி)

**03) தரப்பட்டுள்ள சொற்களை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியம் ஒன்று எழுதுக.**

சிறப்புடன் / செய்தனர் / பொறுப்புக்களை / அனைவரும் / தமது / மிகவும்

..........

(1 புள்ளி)

**04) பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் எழுவாய் பயனிலைத் தொடர்பு சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (×) எனவும் எதிரே உள்ள அடைப்புக்குறிக்குள் அடையாளம் இடுக.**

i) அம்மாவுடன் தம்பி சென்றது. ( )

ii) மாணவர்கள் பாடசாலைக்குச் செல்வார்கள். ( )

iii) புறாக்கூட்டம் பறந்தன. ( )

iv) ஒவ்வொரு பறவையும் அழகானவை. ( ) (4 புள்ளிகள்)

**05) பொருத்தமான நிறுத்தக்குறிகளை இடுக.**

ஐயா நீங்கள் எங்கே போக வேண்டும் (1 புள்ளி)

## விடைகள்

***37. 1*** ***38. 2*** ***39. 1*** ***40. 2***

**01.** 1) காலிக்கோட்டை 2) புராதன
3) காணப்பட்டன 4) அழகு
5) காலி நகரின் அழகு 6) காலிக் கோட்டை, காலி, கோட்டை

**02.** விழுகின்றன

**03.** அனைவரும் தமது பொறுப்புக்களை மிகவும் சிறப்புடன் செய்தனர்.

**04.** 1) × 2) ✓ 3) × 4) ×

**05.** ஐயா, நீங்கள் எங்கே போக வேண்டும்?

---

கல்வி tv CHANNEL-1

**12.12.2022 திங்கட்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | தமிழ் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | விஞ்ஞானம் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast உயிரியல் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு உயிரியல் |
| | | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | விஞ்ஞானம் |

கல்வி tv CHANNEL - 2

**12.12.2022 திங்கட்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-02 | கணிதம் |
| 09.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | தரம்-03 | தமிழ் |
| 11.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-04 | தமிழ் |
| 01.15 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-05 | தமிழ் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoon |
| 05.15 | தரம்-02 | கணிதம் |
| 06.00 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 06.45 | தரம்-03 | தமிழ் |
| 07.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 08.15 | தரம்-04 | தமிழ் |
| 09.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 09.45 | தரம்-05 | தமிழ் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-03 | தமிழ் |
| 01.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-04 | தமிழ் |
| 02.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 03.30 | தரம்-05 | தமிழ் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# ஆசிரியர் கடத்தல் விவகாரம் சந்தேகநபர் ஒருவர் கைதானர்!

காத்தான்குடி, டிசெ. 12

காத்தான்குடியில் ஆசிரியர் ஒருவரை வான் ஒன்றில் கடத்திச் சென்ற சம்பவம் தொடர்பான பிரதான சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டார். அத்துடன், கடத்தலுக்கு பயன்படுத்திய வான், மோட்டர் சைக்கிள் ஒன்றையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். மற்றொரு சந்தேகநபர் வெளிநாட்டுக்குத் தப்பிச் சென்றுள்ளார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

ஒல்லிக்குளம் பாடசாலை ஒன்றில் ஆசிரியராக கடமையாற்றிவரும் காத்தான்குடியைச் சேர்ந்த 51 வயதுடைய ஆசிரியருக்கும் காங்கேயனோடை பிரதேசத்தைச் சேர்ந்த கடத்தலில் ஈடுபட்டவர்களான இரு சகோதரர்களுக்கும் இடையே காணி விவகாரம் தொடர்பாக நீதிமன்றில் வழக்கு இடம்பெற்று வருகிறது.

வாடகைக்குப் பெற்றுக் கொள்ளப்பட்ட வான் ஒன்றில் கடந்த 6ஆம் திகதி இரவு ஆசிரியர் மோட்டார் சைக்கிளில் மெத்தைப்பள்ளி வீதியில் பயணித்துக் கொண்டிருந்தபோது வானில் வந்த இருவரும் அவரை வழிமறித்து வானில் கடத்தி சென்றனர்.

இதன் பின்னர் கடத்தல்காரர்கள் அவரைத் தங்களது வீட்டுக்குக் கொண்டு சென்று தாக்கியதுடன், இரு தினங்கள் அடைத்து வைத்திருந்தனர். பின்னர் 8ஆம் திகதி ஆரையம்பதி - மாவிலங்குதுறை பகுதியில் கொண்டு சென்று விட்டுச் சென்றனர்.

அங்கிருந்து மீட்கப்பட்டவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். இதைத் தொடர்ந்து பொலிஸார் நடத்திய விசாரணைகளில் சந்தேகநபர் கைது செய்யப்பட்டார். கைதானவரை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. (ஐ)

# அம்பாறையில் உக்கிர கடலரிப்பு; பல இடங்களிலும் பெரும் பாதிப்பு!

- தடுக்கும் நடவடிக்கைகளும் தீவிரம் -





நிந்தவூர், டிசெ. 12

அம்பாறை மாவட்டத்தின் கரையோரப் பிரதேசங்களில் கடந்த மூன்று நாட்களாக கடல் சீற்றம் தொடர்கிறது. இதனால் முக்கிய பகுதிகள் பல கடலரிப்புக்கு உள்ளாகியுள்ளன.

நிந்தவூர் பிரதேசம் உக்கிர கடலரிப்பு அனர்த்தத்தால் பெரும் பாதிப்பை எதிர்நோக்கியுள்ள நிலையில், தொடரான அயல் பிரதேசங்களான மாளிகைக்காடு, சாய்ந்தமருது, மருதமுனை முதலான பிரதேசங்களையும் கடல் சீற்றம் பாதிக்கத் தொடங்கியுள்ளது.

குறிப்பாக மருதமுனைப் பிரதேசத்தில் ஏற்பட்டுள்ள கடலரிப்பு காரணமாக, சுமார் 18 வருடங்களுக்கு முன்னர் அமைக்கப்பட்ட மருதமுனை வெளிச்ச வீடு கடலால் காவு கொள்ளப்படும் அபாய நிலையும் ஏற்பட்டுள்ளது.

இதேவேளை, மருதமுனை மக்கள் அதிகாரிகளுடன் இணைந்து மண்மூடைகளை அடுக்கி பாதிப்புகளை தடுக்கத் தற்காலிக நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர்.

இதேவேளை மிகமோசான கடலரிப்பு பாதிப்பை எதிர்நோக்கிய நிந்தவூரில் கருங்கற்களால் வேலை அமைக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

வங்காள விரிகுடாவின் தென்பகுதியில் ஏற்பட்ட தாழமுக்கம் காரணமாக திடீரென கடலில் ஏற்பட்ட கொந்தளிப்பு சீற்றமும், மூன்று தினங்களைக் கடந்தும் தணியாது உள்ளமை மக்களை அச்ச நிலைமைக்கும் பெரும் அவலத்திற்கும் உள்ளாக்கியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-06)

# தொடரும் குளிர் காலநிலை இரு குழந்தைகள் உயிரிழப்பு

திருகோணமலை, டிசெ. 12

வடக்கு, கிழக்கில் நிலவும் குளிருடனான மோசமான காலநிலையால் திருகோணமலையில் இரு குழந்தைகள் உயிரிழந்தனர் என்று சுகாதார திணைக்களம் அறிவித்துள்ளது.

திருகோணமலை - கந்தளாயில் இந்த இரு குழந்தைகளும் உயிரிழந்தன. கந்தளாய் - பேராறு பகுதியை சேர்ந்த 3 வயது குழந்தையும் கந்தளாய் - ராஜஅல பகுதியை சேர்ந்த இரண்டரை மாத குழந்தையுமே இவ்வாறு உயிரிழந்தன.

உயிரிழந்த 3 வயது குழந்தை நுரையீரல் கோளாறால் பாதிக்கப்பட்டிருந்தது. கடும் குளிரால் மூச்சு திணறல் ஏற்பட்டு அந்தக் குழந்தை உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

இதனிடையே, இந்த நாட்களில் நிலவும் கடும் குளிரான காலநிலை காரணமாக சிறு பிள்ளைகளுக்கு சுவாசக் கோளாறுகள் மற்றும் ஏனைய நோய்கள் ஏற்படும் அபாயம் காணப்படுகிறது என்று கொழும்பு லேடி ரிட்வே சிறுவர் மருத்துவமனையின் சிறுவர் மருத்துவ நிபுணர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார்.

எனவே, கடும் குளிரில் இருந்து குழந்தைகளை பாதுகாக்க தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு பெற்றோர்களை அவர் அறிவுறுத்தியுள்ளார். (ஐ)

# கால்நடைகள் குளிரால் மரணம் சுகாதார திணைக்களம் கவனம்!

திருகோணமலை, டிசெ. 12

கடந்த சில நாட்களாக கிழக்கு மாகாணத்தில் நிலவும் கடும் குளிரான காலநிலை காரணமாக கால்நடைகள் உயிரிழந்தமை தொடர்பில் கிழக்கு மாகாண கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களம் அவதானம் செலுத்தியுள்ளது.

கால்நடைகளை பாதுகாக்கும் வகையில் உடனடியாக சம்பந்தப்பட்ட கால்நடை வளர்ப்பாளர்களுக்கு தெரியப்படுத்த தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தின் மாகாண பணிப்பாளரிடம் கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் உத்தரவிட்டுள்ளார்.

ஊடகங்களுக்கு ஆளுநர் விடுத்துள்ள அறிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். (ஐ)

# தலைமுறைகள் கடந்தும் போராட்டங்கள் தொடரும்!

இரா. சாணக்கியன் எம். பி.

மட்டக்களப்பு, டிசெ. 12

எங்களின் அரசியல் உரிமைக்காகவும், மனித உரிமைகள் மீறல்களுக்கு நீதி கிடைக்கும் வரைக்கும் எந்தனை தலைமுறைகள் எடுத்தாலும் எங்கள் போராட்டம் தொடரும் என்று பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

சர்வதேச மனித உரிமைகள் தினமான நேற்று முன்தினம் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் சங்கம் மட்டக்களப்பில் நடத்திய பேரணியில் பங்கேற்று உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், அண்மைகாலங்களில் முஸ்லிம் சமூகத்துக்கு எதிராக ஜனாஸா எரிப்பு போன்ற விடயங்கள் பெரும் மனித உரிமைகள் மீறல் நடந்தன.

மனித உரிமைகளை மதிக்கும் நாடாக இலங்கை மாறும் வரைக்கும் இந்த நாட்டுக்கு எந்தொவொரு எதிர்காலமும் இல்லை. மனிதனுக்கே மதிப்பில்லை என்றால் அவ்வாறான நாடு எவ்வாறு ஒரு ஜனநாயக வழியிலே பொருளாதார வழியில் அபிவிருத்தியடைய முடியும் என பெரும்பான்மை சமூகம் உணரவேண்டும்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட இந்த தாய்மார்கள் களைத்து போய் விடுவார்கள், குறிப்பிட்ட காலப்பகுதியில் இந்த போராட்டத்தை கைவிடுவார்கள் என எவராவது நினைத்தால் பிழையானதை நம்பியிருக்கின்றீர்கள். ஏன் என்றால் இந்த தாய்மார்கள் அடுத்த தலைமுறைக்கு இந்த போராட்டத்தை ஒப்படைத்துள்ளனர்.

சிலர் நினைக்கலாம் தமிழர்களுக்கு அடித்து அடித்து அவர்கள் களைத்து விட்டார்கள் என நினைக்கின்றனர். ஆனால், நாங்கள் எவ்வளவு அடித்தாலும் எவ்வளவு கொடுமை செய்தாலும் களைத்து போகமாட்டோம் எங்களின் அரசியல் உரிமைக்காகவும் மக்களுடைய மனித உரிமைகள் மீறல்களுக்கு நீதி கிடைக்கும் வரைக்கும் எந்தனை தலைமுறைகள் எடுத்தாலும் எங்கள் போராட்டம் தொடரும் - என்றார். (ஐ-06)

# காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் மட்டக்களப்பில் கவனவீர்ப்புப் பேரணி!




மட்டக்களப்பு, டிசெ. 12

சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு சர்வதேச நீதி கோரி மட்டக்களப்பில் நேற்று முன்தினம் பேரணி நடத்தப்பட்டது.

"நாங்கள் உண்மைக்காகவும் நீதிக்காவும் தொடர்ந்து போராடுவோம்", என்னும் தொனிப்பொருளில் வட, கிழக்கு மாகாண வலிந்து காணாமல்ஆக்கபட்டோர் சங்கத்தின் ஏற்பாட்டில் கிழக்கு மாகாணம் தழுவியதாக இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது மட்டக்களப்பு கல்லடி பாலத்துக்கு அருகில் உள்ள தேவாலயத்திலிருந்து காந்திபூங்கா வரையில் மாபெரும் கவனவீர்ப்பு பேரணியானது மட்டக்களப்பு காந்திபூங்கா வரையில் நடைபெற்றது.

இந்த கவனவீர்ப்பு பேரணியில் அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களிலிருந்து நூற்றுக்கணக்கான வலிந்துகாணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் மற்றும் பொது மக்கள் பங்கேற்றனர்.

இதன்போது ஐநா மனித உரிமைகள் பேரவைக்கு அனுப்புவதற்கான மகஜர் ஒன்று இதன் போது வாசிக்கப்பட்டதை தொடர்ந்து இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் மட்டக்களப்பு மாவட்ட இணைப்பாளர் அப்துல் லத்தீப் இஸ்ஸதீனிடம் கையளிக்கப்பட்டது. (ஐ)

# உக்ரைனில் அமைதி திரும்ப கண்ணீர்விட்டழுத பாப்பரசர்



ரோம், டிசெ. 12

ரஷ்யா உக்ரைன் போர் குறித்து பேசும்போது பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸ் கண்ணீர் விட்டழுதுள்ளார்.

நேட்டோவில் இணைய உக்ரைன் விருப்பம் தெரிவித்ததைத் தொடர்ந்து பாதுகாப்பு அச்சுறுத்தல் காரணமாக அந்த நாட்டின் மீது கடந்த பிப்ரவரி மாதம் ரஷ்யா போர்தொடுத்தது. 200 தினங்களைக் கடந்து நடந்துவரும் இந்த போரில் இதுவரை இரு தரப்பிலும் பலத்த இழப்புகள் ஏற்பட்டுள்ளன.

இந்நிலையில் ரோமில் நடைபெற்ற கிறிஸ்துமஸ் விழாவில் பங்கேற்ற பாபப்பரசர் பிரான்சிஸ் இரு நாடுகளுக்கும் இடையேயான போர் விரைவில் முடிவுக்கு வர வேண்டும் என வலியுறுத்தி பேசினார்.

அப்போது உக்ரைனில் அமைதி திரும்ப வேண்டும் என தெரிவித்த பாப்பரசர் பிரான்சிஸ் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியாமல் அழுதார். இதனால் அப்பகுதியில் இருந்த மக்கள் அதிர்ச்சியடைந்தனர்.

பின்னர் மீண்டும் தனது பேச்சைத் தொடர்ந்த பாப்பரசர் உக்ரைன் மக்கள் அமைதியுடன் வாழ இறைவனிடம் வேண்டுவதாகக் கூறி தனது உரையை நிறைவு செய்தார். (ஐ)

# போராடும் பெண்களின் முகத்தை குறிவைத்து 'பெல்லட்' தாக்குதல்!

## - ஈரான் பொலிஸாரின் கொடூரம் அம்பலம் -




தெஹ்ரான், டிசெ. 12

ஈரானில் கட்டாய ஹிஜாப்பை எதிர்த்து போராடும் பெண்கள் மீது பாதுகாப்புப் படையினர் கடுமையாக தாக்குதல் நடத்தியது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

இதுகுறித்து ஊடகங்கள், "அண்மையில் ஈரானில் ஹிஜாப்புக்கு எதிராக நடந்த போராட்டத்தில் பெண்கள் முகங்கள் மீதும், அவர்களது பிறப்புறுப்புகள் மீதும் பாதுகாப்புப் படையினர் கடுமையான தாக்குதல் நடத்தியுள்ளனர்." என்று செய்தி வெளியிட்டுள்ளன.

இந்தப் பெண்களுக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் கூறும்போது, "20 வயது மதிக்கதக்க இளம்பெண் ஒருவருக்கு நான் சிகிச்சை அளித்தேன். கிட்டதட்ட 20 பெல்லட் குண்டுகள் அவரது தொடையில் இருந்தன. பிறப்புறுப்புகளிலும் பெல்லட் குண்டுகள் காணப்பட்டன" என்றார்.

இந்த நிலையில் பெண்கள் மீது ஈரான் படையினர் தாக்குதல் நடத்திய புகைப்படங்கள் வைரலாகி வருகின்றன.

கடந்த செப்ரெம்பர் 13ஆம் திகதி ஈரானின் குர்திஸ்தான் மாகாணம், சஹிஸ் நகரைச் சேர்ந்த மாஷா அமினி (22) என்ற இளம்பெண் தலைநகர் தெஹ்ரானில் உள்ள உறவினரை சந்திக்க குடும்பத்துடன் சென்றார். அப்போது ஹிஜாப் கண்காணிப்பு பொலிஸார் மாஷாவை வழிமறித்து அவர் முறையாக ஹிஜாப் அணியவில்லை என்று குற்றம்சாட்டி கைது செய்ததுடன், அவரை தாக்கியதில் அவர் உயிரிழந்தார்.

இதையடுத்து ஈரானில் பெரும் போராட்டம் ஹிஜாப்புக்கு எதிராக ஏற்படட்டது. இப்போராட்டத்தில் 200இற்கும் அதிகமானவர்கள் கொல்லப்பட்டனர். மேலும் போராட்டத்தில் ஈடுபட்ட சிலருக்கு ஈரான் மரணத் தண்டனை விதித்தது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

இந்த நிலையில், போராட்டத்தை கட்டுப்படுத்தும் விதமாக ஈரானில் ஹிஜாப் கண்காணிப்பு பொலிஸ் பிரிவைக் கலைத்துள்ளதாக அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது. எனினும், இதனை போராட்டக்காரர்களின் ஒரு தரப்பு நம்பவில்லை. தொடர்ந்து அங்கு போராட்டம் நடந்து வருகிறது. (ஐ)



உக்ரைனின் கார்கீவ் நகரம் மீது ரஷ்யா நடத்திய ஏவுகணை தாக்குதல்களின் எச்சங் களை ஆய்வு செய்கிறார் உக்ரைன் வழக்கறிஞர். ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் போர் குற்றம் புரிந்தார் என்று உக்ரைன் வழக்கு தொடரவுள்ளது. இதற்காகவே இந்த ஆதாரங்கள் சேர்க்கப்படுகின்றன.

# இந்த ஆண்டில் மட்டும் 67 செய்தியாளர்கள் பலி!

நியூயோர்க், டிசெ. 12

இந்த ஆண்டில் உலகம் முழுவதும் பணியின்போது கொல்லப்பட்ட செய்தியாளர்களின் எண்ணிக்கை 67ஆக அதிகரித்துள்ளது.


இது குறித்து சர்வதேச செய்தியாளர்கள் சம்மேளனம் வெளியிட்டுள்ள அறிக்கையில், "2022 ஆம் ஆண்டில் உலகம் முழுவதும் செய்தி சேகரிக்கும் பணியின் போது 67 பணியாளர்கள் கொல்லப்பட்டனர்.

வன்முறைக்கு கடந்த ஆண்டு 47 செய்தியாளர்கள் பலியான நிலையில், தற்போது அந்த எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

உக்ரைன் போர், ஹெய்டி அரசியல் பதற்றம், மெக்சிக்கோ கும்பல் வன்முறை போன்ற காரணங்களால் செய்தியாளர்களின் உயிரிழப்பு இந்த ஆண்டு இவ்வளவு அதிகமாக உள்ளது", என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ)

# கிழக்கு உக்ரைனை ரஷ்யா அழித்துவிட்டது!

## உக்ரைன் ஜனாதிபதி குற்றச்சாட்டு



கீவ், டிசெ. 12

கிழக்கு உக்ரைனை மக்கள் வாழமுடியாதபடி ரஷ்யா அழித்துவிட்டது என்று உக்ரைன் ஜனாதிபதி குற்றஞ்சாட்டியுள்ளார்.

உக்ரைன் நாட்டின் மீது ரஷ்யா 10 மாதங்களாக போர் நடத்தி வருகிறது. தற்போது இந்த போர் சட்டவிரோதமாக ரஷ்யாவுடன் இணைத்துக் கொள்ளப்பட்ட 4 மாகாணங்களில் மையம் கொண்டுள்ளது. அந்த மாகாணங்களின் கட்டுப்பாட்டை நிறுவ ரஷ்யா போராடி வரும் சூழலில் அந்த மாகாணங்களை மீட்க உக்ரைன் ராணுவம் விடாமுயற்சியுடன் சண்டையிட்டு வருகிறது.

இதனால் அந்த 4 மாகாணங்களிலும் உள்ள பல்வேறு நகரங்களில் தினமும் குண்டு மழை பொழிந்து வருகிறது.

இந்த நிலையில் உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி நேற்று முன்தினம் காணொலி வாயிலாக நாட்டு மக்களுக்கு உரையாற்றியபோது,

"கிழக்கு உக்ரைனின் டொனெட்ஸ்க் மற்றும் லுஹான்ஸ்க் மாகாணங்களில் உள்ள பல முன்னணி நகரங்களில் நிலைமை மிகவும் கடினமாக உள்ளது. குறிப்பாக டொனெட்ஸ்க் மாகாணத்தில் உள்ள கிழக்கு நகரமான பக்முத்தை ரஷ்ய ஆக்கிரமிப்பாளர்கள் அழித்துவிட்டனர். அந்த நகரின் நிலத்தில் வாழ்வதற்கு இடமில்லை" என குற்றம்சாட்டினார். (ஐ)

# அன்னாசி பழத்தின் விலை நான்கரை இலட்சம் ரூபாய்!



லண்டன், டிசெ. 12

இங்கிலாந்தில் ஹெலிகான் அன்னாசி பழம் ஒன்றின் விலை நம் நாட்டு மதிப்பில் நான்கரை இலட்சம் ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகின்றது.

அன்னாசி பழத்தில் விற்றமின் சி, அன்ரி - ஒக்ஸிடன்ட், மங்கனீஸ், பொட்டாசியம் போன்ற தாதுப் பொருட்கள் உள்ளன. இது, உடல் ஆரோக்கியத்துக்கு சிறந்த பழமாக திகழ்கிறது. குறிப்பாக, குளிர் காலத்தில் இதை உண்ணும்போது உடலுக்கு ஏராளமான நன்மைகள் ஏற்படுவதாக கூறப்படுகிறது.

இந்த அன்னாசி பழத்தின் வகைகளில் உலகின் மிக விலை உயர்ந்ததாக இங்கிலாந்தின் கோன்வால் தோட்டத்தில் விளைவிக்கப்படும் ஹெலிகான் அன்னாசி பழம் உள்ளது. இதன் ஒன்றின் விலை 1,000 ஸ்ரேலிங் பவுண்ஸ்களாகும் - நம் நாட்டு மதிப்பில் சுமார் 4 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் என்று பி. பி. சி தெரிவித்துள்ளது.

ஹெலிகான் அன்னாசி பழம் 1819 ஆம் ஆண்டில்தான் முதல் முதலாக இங்கிலாந்துக்கு கொண்டு வரப்பட்டது. எனினும், தோட்டக்கலை வல்லுநர்கள் நாட்டின் தட்பவெப்பநிலை அன்னாசி பயிர்செய்கைக்கு ஏற்றபடி இல்லை என்பதை உணர்ந்திருந்தனர். இதனால், அவர்கள் அதனை பயிர் செய்வதற்கென பிரத்யேக வழிமுறைகளை உரு வாக்கினர்.

இதற்கான செலவினம் அதிகம் என்பதால் ஒவ்வொரு அன்னாசி பழமும் ஆயிரம் பவுண்ஸ்களுக்கு விற்கப்படுகின்றன. சில பழங்கள் அதனிலும் பல மடங்கு அதிக விளை பெறும் என்றும் கூறப்படுகின்றது. (ஐ)

# பாலியல் பங்காளரை தெரிவு செய்வதில் இளவயதினரிடையே எச்சரிக்கை தேவை!

## சுகாதார திணைக்களம் அறிவுறுத்து

கொழும்பு, டிசெ. 12

எயிட்ஸ் நோயால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கையில் ஏற்பட்டுள்ள அதிகரிப்பு கவலையை ஏற்படுத்துவதாகவும், இளவயதினர் தங்கள் பாலியல் பங்காளிகளுடன் கவனமாக இருக்குமாறும் சுகாதார திணைக்களம் எச்சரித்துள்ளது.

உலக எய்ட்ஸ் தினத்தை நினைவுகூர்ந்த எஸ். ரி. டி. எய்ட்ஸ் திட்டம், சாதாரண உடலுறவில் ஈடுபடுபவர்கள் தங்கள் பங்காளர்கள் யார் என்பதை அறிந்து கொள்ள வேண்டும் என்று எச்சரிக்கை விடுத்தது.

எஸ். ரி. டி. எய்ட்ஸ்திட்டத்தால் வெளியிடப்பட்ட புள்ளிவிவரங்களின் படி, 2022 ஆம் ஆண்டில் 18 முதல் 25 வயதுக் குட்பட்ட 14 பல்கலைக்கழக மாணவர்கள், 3 பாடசாலை மாணவர்கள் உட்பட சுமார் 50 இளவயதினர் எச். ஐ. வி. தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர். கடந்த ஆண்டு, 25 இளவயதினர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

2021ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் 148 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 2022ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் 342 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். மேலும், இந்த ஆண்டின் முதல் பாதியில் எய்ட்ஸ் மற்றும் எய்ட்ஸ் தொடர்பான காரணங்களால் 25 பேர் உயிரிழந்தனர். மொத்தத்தில், கடந்த பல ஆண்டுகளாக 3,600 பேர் எச். ஐ. வியால் பாதிக்கப்பட்டுள்ளனர், அதில் 2,600 பேர் மட்டுமே தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகின்றனர்.

எஸ். ரி. டி. எய்ட்ஸ் திட்டத்தின் பணிப்பாளர் மருத்துவர் ரசாஞ்சலி ஹெட்டியாராச்சி, பெண் பாலியல் தொழிலாளர்கள், 'கடற்கரை சிறுவர்கள்' மற்றும் ஓரினச் சேர்க்கையாளர்களை உள்ளடக்கிய தரப்பினர்களிடையே சோதனையின் அளவு அதிகரிப்பதே அதிகரித்த எண்ணிக்கைக்கு காரணம் என்று கூறினார்.

இந்த ஆண்டு, சுய-பரிசோதனை கருவிகளின் அறிமுகம் பாதிக்கப்பட்டவர்களை முன்கூட்டியே கண்டறிய உதவியது. ஆரம்பகால கண்டறிதல் எச்.ஐ.வியைக் கட்டுப்படுத்தவும், மக்கள் நீண்ட காலம் வாழவும் உதவும். இலங்கையில் அண்மைக் காலமாக வேலை இழந்த இளையவர்கள் பலர், வாழ்வாதாரத்தை மேற்கொள்ள முடியாமல் பாலியல் வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ளனர்.

அவர்கள் இணையத்தில் கூட்டாளர்களைக் கண்டுபிடித்து, அந்நியர்களுடன் சாதாரண உறவுகளைக் கொண்டுள்ளனர். பெரும்பாலும், அவர்கள் பாதுகாப்பற்ற உடலுறவில் ஈடுபடுகிறார்கள். சாதாரண உடலுறவில் ஈடுபடுபவர்கள் உடனடியாக 'மடுெறெ4ளரசந' திட்டத்தின் மூலம் பரிசோதனை செய்து கொள்ளுமாறு அவர் அழைப்பு விடுத்தார். (ஐ)

## குற்றங்களில் ஈடுபடும்அமைப்பினர் மூவர் கைது!

கொழும்பு, டிசெ. 12

ஒழுங்கமைக்கப்பட்ட குற்ற அமைப்பை சேர்ந்த மூன்று பேரை இரு கைத்துப்பாக்கிகள் மற்றும் 10 தோட்டாக்களுடன் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

நீர்கொழும்பு, குருநாகல் - பன்னல பகுதிகளிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். விசேட அதிரடிப் படையினருக்குக் கிடைத்த இரகசிய தகவல்களை அடுத்தே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

கைதானவர்கள் டுபாய் நாட்டிலிருந்து செயல்படுவோரால் வழிநடத்தப்படுகிறது என்று தெரிவிக்கப்பட்டது.

கைதான சந்தேக நபர்கள் 31, 34 மற்றும் 48 வயதினர். இவர்கள் நீர்கொழும்பு, யக்வில மற்றும் கட்டான பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# மோட்டார் சைக்கிளில் சாகசம் 6 பேரின் அனுமதி பத்திரம் ரத்து!

கொழும்பு, டிசெ. 12

மோட்டார் சைக்கிளை முன் சில்லில் செலுத்தி சாகசத்தில் ஈடுபட்ட 6 இளைஞர்களின் சாரதி அனுமதிப் பத்திரத்தை ஒரு வருடத்துக்கு இடைநிறுத்திய நீதிமன்றம், அவர்களுக்க தலா 25 ஆயிரம் ரூபாயை அபராதமாக விதித்துத் தீர்ப்பளித்துள்ளது.

களுத்துறை மாவட்டத்தின் மொரகஹஹேன, ஹொரணை பகுதிகளை சேர்ந்த இளைஞர்கள் குழு ஒன்று மோட்டார் சைக்கிளை ஒற்றைச் சில்லில் ஓடியும், அதிவேகமாக பயணித்தும் பொதுமக்களுக்கு இடையூறையும் அச்சுறுத்தலையும் ஏற்படுத்தியது.

இது தொடர்பில் பொலிஸாருக்கு அளிக்கப்பட்ட முறைப்பாட்டை அடுத்து அவர்கள் கைது செய்யப்பட்டனர். கைதானவர்கள் களுத்துறை நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர்.

இதன்போது, இளைஞர்களின் மோட்டார் சைக்கிள்களை பொலிஸ் காவலில் வைக்குமாறு உத்தரவிட்ட நீதிவான், பிள்ளைகளின் இவ்வாறான செயல்பாடுகள் தொடர்பில் பெற்றோர் மிகவும் பொறுப்புடன் நடக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தினார். (ஐ)

# மனித உரிமைகளை வலியுறுத்தி கொழும்பில் விழிப்புணர்வு பேரணி!

கொழும்பு, டிசெ. 12

சர்வதேச மனித உரிமைகள் தினத்தை அனுஷ்டிக்கும் முகமாக இலங்கையில் நலிவடைந்து செல்லும் மனித உரிமைகளை வலியுறுத்தி தேசிய அமைப்புக்கள் ஏற்பாடு செய்திருந்த விழிப்புணர்வு நிகழ்வு கொழும்பு இலங்கை மன்றக் கல்லூரியிலும் சுதந்திர சதுக்கத்திலும் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றன.

இதில், நாடெங்கிலுமிருந்து வருகை தந்திருந்த தேசிய தன்னார்வ அமைப்புக்களின் பிரதிநிதிகள் மனித உரிமைகள் செயல்பாட்டாளர்கள், மனித உரிமைகள் மீறலால் பாதிக்கப்பட்டோர் எனப் பலர் பங்கேற்றனர்.

முன்னதாக இலங்கை மன்றக் கல்லூரியில் இடம்பெற்ற அமர்வு நிகழ்வில் ஜனாதிபதி சட்டத்தரணியும் சட்டத்தரணிகள் சங்கத் தலைவருமான சாலிய பீரிஸ், பேராசிரியர் கலாநிதி அர்ஜுன பராக்கிரம ஐக்கிய தொழிலாளர் சம்மேளனத்தின் தலைவர் சட்டத்தரணி சுவஸ்திகா அருள்லிங்கன் உட்பட இன்னும் பல தொழில் சங்கப் பிரதிநிதிகள் இலங்கையில் மறுதலிக்கப்படும் மனித உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி நிகழ்வில் உரையாற்றினர்.

இறுதியில் அடக்குமுறைக்கு உள்ளாக்கப்படும் மனித உரிமை மீறல்களை வலியுறுத்தி மௌன மொழி தெருநாடகமும் அமைதிப் பேரணியும் சுதந்திர சதுக்க வளாகத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் காணி உரிமைகளுக்காக களப்பணியாற்றும் காணி உரிமைகளுக்கான மக்கள் கூட்டணி, கிழக்கு மனித எழுச்சி அமைப்பு, காணி உரிமைகளுககான அம்பாறை மாவட்டச் செயலணி, மலையக மக்களின் காணி உரிமைக்கான இயக்கம் உள்ளிட்ட பல்வேறு தேசிய தன்னார்வ அமைப்புக்கள் பங்கெடுத்தன. (ஐ)

# வெளிநாட்டில் கற்ற அரசியல்வாதிகள் நாட்டை சீரழிப்பதற்கு அனுமதிக்காதீர்

## மகா சங்கத்தினரிடம் கர்தினால் ரஞ்சித் கோரிக்கை



கொழும்பு, டிசெ. 12

அரசியல்வாதிகள் தமது அதிகாரங்களையும் பதவிகளையும் தக்க வைத்துக் கொள்வதற்காக இந்நாட்டை பயன்படுத்திக் கொள்வதற்கு இடமளிக்க முடியாது. வெளிநாடுகளில் கல்வி கற்று வந்த அரசியல்வாதிகளால் நாட்டின் கலாசாரம் சீரழிக்கப்படுவதற்கு மகா சங்கத்தினர் அனுமதித்து விடக்கூடாது என்று பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்தார்.

கம்பஹா - குருண புனித பீற்றர் வித்தியாலயத்தில் புதிய கட்டடமொன்றை திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

உயர்மட்டத்திலுள்ளவர்கள் முதல் அடிமட்டத்திலுள்ளவர்கள் என அனைவரும் இன்று மோசடிகளுக்கு அடிமையாகியுள்ளனர். இதன் காரணமாக 74 வருடங்களுக்குள் உண்மைகளை பொய்யாகவும் பொய்களை உண்மைகளாகவும் மாற்றுவதற்கான போக்கின் காரணமாகவே நாடு இன்று இந்த நிலைமையை அடைந்துள்ளது.

ஒருபுறம் போதைப்பொருளை உபயோகிப்பவர்களுக்கும் அவற்றை தம்வசம் வைத்திருப்பவர்களுக்கும் மரண தண்டனை வழங்கப்படுகிறது. ஆனால், மறுபுறம் கஞ்சா பயிர்செய்கையை ஊக்குவிப்பதற்கு முயற்சிக்கப்படுகிறது. வெளிநாடுகளில் கல்வி கற்றவர்கள் இலங்கைக்கு வந்து கசினோக்களையும் இரவு நேர தொழில்களையும் ஊக்குவிக்குமாறு கூறுகின்றனர்.

எமது நாட்டின் நாகரிகம் எங்கே? பௌத்த போதனைகளால் ஒழுக்கம் மிக்க சமூகத்தினர் தோற்றம் பெற்ற இந்த நாட்டின் கலாசாரத்தை சீரழிக்க அரசியல்வாதிகளுக்கு இடமளிக்க முடியாது. இதுபோன்ற முட்டாள்தனமான செயல்பாடுகளுக்கு இடமளிக்க வேண்டாம் என்று மகா சங்கத்தினரிடம் கேட்டுக் கொள்கின்றோம்.

முழு நாட்டையும் விற்றேனும் உண்டு வாழ வேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே இவர்கள் காணப்படுகின்றனர். ஒவ்வொரு வெளிநாட்டு நிறுவனங்களுக்கும் ஒவ்வொரு பகுதிகளையும் வழங்குவதாகக் குறிப்பிடுகின்றனர். இவற்றின் மூலம் எவ்வாறு நாட்டைக் கட்டியெழுப்புவது? அரசியல்வாதிகள் தங்கள் அதிகாரத்தை பாது காத்துக் கொள்வதற்கும் , பதவிகளைப் பாதுகாத்துக் கொள்வதற்கும் இந்த நாட்டை உபயோகித்துக் கொள்ள வேண்டாம்.

சர்வதேச நாணய நிதியமும் உலக வங்கியும் கூறுகின்றது என்பதற்காக நாட்டுக்குப் பொருத்தமற்ற சட்டங்களை நடைமுறைப்படுத்துவது கையேந்தும் செயல்பாட்டைப் போன்றதல்லவா? நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு முழுமையான அறிவுபூர்வமான புரட்சியே அத்தியாவசியமானதாகும் - என்றார். (ஐ)

உங்கள் துயரங்களை பகிர்ந்துகொள்ள யாழ்ப்பாணத்திலிருந்து ஒரு தளம்
துயர் .நெற்
THUYAR.NET
துயர் நெற்றில் பிரசுரமாகும் அனைத்து விளம்பரங்களும் யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும்
ஈழநாடு
Eelanadu
ஈழநாடு தினசரியிலும் வெளியிடப்படும் யாழ்ப்பாணத்திலிருந்து ஒளிபரப்பாகும்
DAN news
டான் நியூஸ் தொலைக்காட்சியிலும் ஒளிபரப்பாகும்
விபரங்களுக்கு: thuyar.net Tel: 0094 752 225 225

சிறுநீரக மாற்று மோசடி:

# சிறுநீரகத்தை எடுப்பதால் ஏற்படும் விளைவை மருத்துவர்கள் உரியோருக்கு விளக்கவில்லை!

## நீதிமன்றில் பிரதிசொலிசிட்டர் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 12

தனியார் மருத்துவமனையை மையமாக வைத்து மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படும் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை தொடர்பான விசாரணைகளில், சிறுநீரகங்களை தானமாக வழங்குவதாகக் கூறப்படும் நபர்களுக்கு உடல்நலப் பிரச்னைகள் குறித்து விளக்கமளிக்கப்படவில்லை என தெரிய வந்துள்ளதாக பொலிஸார் கூறுகின்றனர்.

இந்த மோசடியின் பின்னணியில் உள்ளவர்கள், வறுமையில் வாடும் குடும்பங்களைச் சேர்ந்தவர்களை குறிவைத்து, சிறுநீரகத்தை தானமாக வழங்குவதற்கு பெரும் தொகையை வழங்குவதாக மட்டும் அவர்களிடம் கூறியதாக மூத்த பிரதி சொலிசிட்டர் ஜெனரல் திலீப பீரிஸ் கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றில் தெரிவித்தார்.

பொரளையில் உள்ள வெஸ்டர்ன் மருத்துவமனையின் மருத்துவர்கள், ஊழியர்கள் மற்றும் நிர்வாகிகளின் பங்களிப்புடன் இந்த மோசடி மேற்கொள்ளப்பட்டதாக அவர் கூறினார்.

பாதிக்கப்பட்டவர்களுக்கு ஒரு சிறுநீரகத்துக்கு 50 இலட்சம் ரூபா முதல் ஒரு கோடியே 20 இலட்சம் ரூபாய் வரை கொடுப்பனவுகளை வழங்குவதாக உறுதியளிக்கும் தரகர்களைப் பயன்படுத்தி சிறுநீரகங்கள் பெறப்பட்டன என்று அவர் கூறினார். உள்ளூர் மற்றும் வெளியூர் நோயாளிகளுக்கு சிறுநீரகங்கள் வழங்கப்பட்டன.

மாற்று அறுவை சிகிச்சை செய்த வர்களின் தகவல்கள் மற்றும் நன் கொடையாளர்கள் பற்றிய தகவல்கள் அடங்கிய கோப்புறைகள் மற்றும் ஆவணங்களின் அசல் ஆவணங்களை கொழும்பு குற்றப்பிரிவிடம் ஒப்படைக்குமாறு கொழும்பு பிரதான நீதிவான் உத்தரவிட்டதை மருத்துவமனை இதுவரை நிறைவேற்றவில்லை என்றும் திலீப பீரிஸ் நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சைகளை மேற்கொள்ளும் போது 1987 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க மனித திசுக்கள் மாற்றுச் சட்டத்தின் விதிகளை மருத்துவமனை கடைப்பிடித்ததா என்பதைக் கண்டறிய விசாரணைகள் நடைபெற்று வருவதாக அவர் கூறினார்.

முழு திட்டமும் ஒரு மனித உறுப்பு மோசடி என்பதில் சந்தேகமில்லை என திலீப பீரிஸ் குற்றம் சாட்டினார். சிறுநீரகத்தை தானம் செய்வது அவர்களின் ஆரோக்கியத்தை எவ்வாறு பாதிக்கிறது என்பது குறித்து நன்கொடையாளர்களுக்கு விளக்கப்படவில்லை என்றும் கூறினார். மேலும், நன்கொடையாளர்களுக்கு உறுதியளித்த முழுத் தொகையும் வழங்கப்படவில்லை. மருத்துவமனைப் பணிப்பாளர்களுக்கு வெளிநாட்டுப் பயணத் தடையை நீதிமன்றம் விதித்துள்ள நிலையில், தரகராகச் செயல்பட்ட 41 வயதுடைய சந்தேக நபர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

சிறுநீரகம் தானம் செய்வதாக உறுதியளித்த பணம் கிடைக்கவில்லை என இதுவரை 5 பேர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு அளித்திருந்தனர்.

இதேசமயம், வெஸ்டர்ன் மருத்துவமனை குற்றச்சாட்டை நிராகரித்தது, சரியான நடைமுறையைப் பின்பற்றுகிறது என்று அறிக்கை மூலம் தெரிவித்துள்ளது. (ஐ)

# தேர்தலில் மொட்டு சின்னத்தில் பெரமுன தனித்தே போட்டியிடும்!

## பொதுச்செயலாளர் சாகர காரியவசம்

கொழும்பு, டிசெ. 12

“உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் பொதுஜன பெரமுன தனித்தே போட்டியிடும். எந்தக் காரணத்துக்காகவும் கட்சியின் தனித்துவத்தை விட்டுக் கொடுக்க முடியாது. தேர்தலை வெற்றி கொள்வதற்கான ஆரம்ப கட்ட நடவடிக்கை பஸில் ராஜபக்ஷ தலைமையில் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அடுத்த மாதம் முதல் நாடளாவிய ரீதியில் கட்சி கூட்டங்களை நடத்துவோம்”, என பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

சமகால அரசியல் நிலவரம் தொடர்பில் வினவிய போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தேர்தலை பிற்போட வேண்டிய தேவை பொதுஜன பெரமுனவுக்குக் கிடையாது. வெற்றியோ,தோல்வியோ உரிய




காலத்தில் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்பதை அரசாங்கத்திடம் வலியுறுத்தியுள்ளோம். தேர்தலை நடத்துவதற்கான சூழல் காணப்படுவதாக சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார்.

சிறீ லங்கா பொதுஜன பெரமுன பிறிதோர் அரசியல் கட்சியுடன் கூட்டணி அமைத்து, பொதுச் சின்னத்தில் போட்டியிடுவதாக வெளியான செய்திகள் அடிப்படையற்றவையாகும். வெற்றியோ, தோல்வியோ சிறீ லங்கா பொதுஜன பெரமுன தனித்து மொட்டு சின்னத்தில் போட்டியிடும். உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான ஆரம்பகட்ட நடவடிக்கை பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ஷ தலைமையில் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் நாட்களில் பொதுஜன பெரமுன கூட்டணியில் உள்ள பங்காளிக் கட்சிகளுடன் பேச்சில் ஈடுபட தீர்மானிக்கப்பட்டுள்ளது. உள்ளூராட்சி மன்றத் தேர்தலை இலக்காக கொண்டு எதிர்வரும் மாதம் முதல் நாடளாவிய ரீதியில் கட்சி கூட்டங்களை நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. பெரும்பாலான மக்கள் பொதுஜன பெரமுனவுக்கு ஆதரவு வழங்குவார்கள் - என்றார். (ஐ)

# காகிதப் பற்றாக்குறையால் பொலிஸாருக்கு புதிய சிக்கல்!

கொழும்பு, டிசெ. 12

நாடு முழுவதும் உள்ள பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடுகளை பதிவு செய்ய புத்தகங்கள் போதிய அளவில் கிடைக்காததால் முறைப்பாடுகளை பதிவு செய்வதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

நாட்டில் நிலவும் காகிதத் தட்டுப்பாடு, காகித விலை உயர்வு போன்ற காரணங்களால் பொலிஸ் நிலையங்களுக்கு தேவையான புத்தக விநியோகம் பாதியாகக் குறைந்துள்ளது.

கொழும்பை அண்மித்த பொலிஸ் நிலையங்களுக்கு மாத்திரம் மாதாந்தம் சுமார் இருபது முறைப்பாட்டு புத்தகங்கள் தேவைப்படுகின்ற போதிலும் தற்போது ஐந்து புத்தகங்கள் மாத்திரமே கிடைக்கின்றன என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையால், புத்தகங்கள் முடிந்த பின்னர், வேறு குறிப்பேடுகளை பயன்படுத்த வேண்டியுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# மின்சார நுகர்வு 12 வீதத்தால் வீழ்ச்சி

கொழும்பு, டிசெ. 12

நாட்டின் மின்சார நுகர்வு இந்த ஆண்டு 12 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளது என்று இலங்கை பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

நுவரெலியா - ஹற்றனில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் உரையாற்றிய ஆணைக்குழுவின் தலைவர் ஜானக ரத்நாயக்க இதனைத் தெரிவித்தார்.

அடுத்த வருடம் வறட்சி ஏற்படும் என இலங்கை மின்சார சபை கூறுவதில் எவ்வித அடிப்படையும் இல்லை. அத்துடன் கடந்த காலங்களில் மின்சார விநியோகத் தடை மற்றும் கட்டண அதிகரிப்பு என்பன காரணமாக நுகர்வு குறைந்துள்ளதாக என்றும் அவர் குறிப்பிட்டார். (ஐ)

# முன்னாள் துணைவேந்தர்மீது 300 மாணவர்கள் தாக்குதல்!

கண்டி, டிசெ. 12

பேராதனை பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் அதுல சேனாரத்ன மற்றும் அவரது மகன் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.



அவரின் இல்லத்துக்கு முன்பாக நேற்று முன்தினம் இரவு 10 மணியளவில் 300 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் கூடி தாக்குதலை நடத்தினர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

முன்னாள் துணைவேந்தரின் மகன் செலுத்திச் சென்றார் என்று கூறப்படும் கார் ஒன்று, பல்கலைக்கழக வளாகத்தில் நிறுத்தப்பட்டிருந்த மாணவர்களின் மோட்டார் சைக்கிள்களை மோதித் தள்ளி விட்டு சென்றதாகவும் இதன் போது அவர் குடி போதையில் இருந்தார் என்றும் தெரிவித்தே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

விரைந்து செயல்பட்ட பேராதனை பொலிஸார், மாண வர்களை அங்கிருந்து கலைத்து முன்னாள் துணைவேந்தரையும் அவரது மகனையும் தமது பொறுப்பில் எடுத்துள்ளனர்.

தாக்குதலில் காயமடைந்த முன்னாள் துணைவேந்தர் பேராதனை மருத்துவமனையில் சிகிச்சை பெறுகிறார். அவரின் மகன் கண்டி தேசிய மருத்துவமனையில் பொலிஸாரின் பாதுகாப்பில் சிகிச்சை பெறுகிறார். (ஐ)

# தகவல் தொழில்நுட்பப் பாடம் ஓ.எல். மாணவருக்கு கட்டாயம்!

கொழும்பு, டிசெ. 12

அனைத்து மாணவர்களும் உள்நாட்டிலும் சர்வதேச அளவிலும் வேலைச் சந்தையின் தற்போதைய தேவையைப் பூர்த்தி செய்யும் நோக்குடன் அடுத்த ஆண்டு முதல் கல்விப் பொதுத் தராதர சாதாரண தர மாணவர்களுக்கு தகவல் தொழில்நுட்ப பாடம் கட்டாயமாக்கப்படவுள்ளது. இதற்கான பாடத்திட்டம் விரைவில் திருத்தம் செய்யப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அடுத்த ஆண்டு தொடக்கத்தில் 1,000 அரச பாடசாலைகளில் தகவல் தொழில்நுட்ப வசதிகள் ஏற்படுத்தப்படும். இந்த நோக்கத்திற்காக சுமார் 100 கோடி ரூபாய் அரசாங்கத்தால் ஒதுக்கப்படும் என கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

தகவல் தொழில்நுட்பம் தொடர்பான பாடங்களில் திறமையான 15 ஆயிரம் ஆசிரியர்கள் அடுத்த ஆண்டு தொடக்கத்தில் தொலைதூரப் பாடசாலைகளின் சேவைக்காக நியமிக்கப்படுவார்கள். இதேவேளை சுமார் 9,500 மூத்த ஆசிரியர்கள் அடுத்த ஆண்டுக்குள் ஓய்வு பெற விண்ணப்பித்துள்ளனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

தகவல் தொழில்நுட்ப ஆசிரியர்களுக்கு உள்நாட்டிலும் உலக அளவிலும் பெரும் தேவை இருக்கிறது. பாடசாலைகளை விட்டு வெளியேறும் 75 ஆயிரம் பேருக்கு அடுத்த ஆண்டு பயிற்சி அளிக்க ரூ. 70 கோடி அரசாங்கத்தால் ஒதுக்கப்பட்டுள்ளது என்றும் அமைச்சர் தெரிவித்தார். (ஐ)

## உள்ளூராட்சி....

இதேவேளை அரசியல் தீர்வு விடயத்தில் ஏற்கனவே தமிழ்த் தேசிய கட்சிகளுடன் பேசியபடி,

ஆக்கிரமிக்கப்பட்டுள்ள காணிகள் உடனடியாக விடுவிக்கப்படவேண்டும், தொடர்ச்சியான நில ஆக்கிரமிப்புக்கள் நிறுத்தப்படவேண்டும், காணி சுவீகரிப்பு நடவடிக்கைகள் நிறுத்தப்பட வேண்டும், தற்போதைய அரசமைப்பிலும் சட்டங்களிலும் உள்ள அதிகாரப் பகிர்வு விடயங்கள் முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட்டு மாகாண சபை தேர்தல் நடத்தப்பட வேண்டும், வடக்கு - கிழக்கில் அர்த்தமுள்ள அதிகார பகிர்வு முறையில் சமஷ்டி கட்டமைப்பில் உள்ளக சுயநிர்ணய அடிப்படையில் அதிகாரங்கள் பகிரப்பட வேண்டும் என்ற 3 விடயங்களையும் சமாந்தரமாக முன்கொண்டு செல்வதென தீர்மானித்துள்ளோம்.

சில கால எல்லைகளுக்குள் இவை நடக்க வேண்டும் எனவும் அரசாங்கத்துக்கு சொல்லவுள்ளோம். அவற்றை ஏனைய கட்சிகளுடனும் பகிர்ந்து ஒற்றுமையான நிலைப்பாட்டை இந்த பேச்சின்போது எடுக்க தீர்மானித்துள்ளோம்.

**எல்லை நிர்ணயம்**

தற்போது இடம்பெறும் உள்ளூராட்சி மன்றங்களின் எல்லை மீள் நிர்ணயம் தொடர்பில் ஆராய்ந்துள்ளோம். இந்த எல்லை மீள் நிர்ணயம் சில இடங்களில் பாதிப்புகளை ஏற்படுத்துகின்றது. அவற்றை உடனடியாக ஆணைக்குழுவுக்கு தெரியப்படுத்துவதாகவும் 60இற்கு 40 என்ற விகிதத்தில் உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுவதாக உள்ள சட்டம் 70: 30ஆக மாற்றப்பட வேண்டும் என்பதனை பாராளுமன்றத்திலும் அரசாங்கத்துக்கும் தெரியப்படுத்த தீர்மானித்துள்ளோம்.

உள்ளூராட்சி தேர்தல்களில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் கட்சிகள் தனித்தனியாக முகம் கொடுப்பது தொடர்பில் தொழில்நுட்ப ரீதியில் இவ் விடயம் ஆராயப்பட்டுள்ளது. வட்டார ரீதியாக ஒரு வீதமும் அதற்கு மேலதிகமாக விகிதாசார முறையிலும் சேர்த்துக் கொள்ளப்படுவது தொடர்பில் சென்ற முறை எமக்கு இருக்கும் அனுபவங்களின் அடிப்படையில் பார்த்து தனித்தனியாக போட்டியிட்டு தமிழ் தேசிய கூட்டமைப்புக்கு கூடுதலான உறுப்பினர்களை சேர்க்குமா இல்லையா என்கின்ற தொழில்நுட்ப ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ளோம். அது தொடர்பில் நாம் சிந்திப்போம்.

**அரசியல் கைதிகள்**

ஜனாதிபதியுடனும் நீதி அமைச்சருடனும் நான் பேசியபோது அரசியல் கைதிகள் 32 பேர் இருக்கின்றனர் என்று தெரிவித்துள்ளனர். அதில் ஜனாதிபதியின் மன்னிப்பில் விடுதலை செய்யப்படக்கூடியவர்கள் எவரும் இல்லை என்ற கருத்தும் கூறப்பட்டது. எனினும், ஜனாதிபதி அதனை மீள் பரிசீலனை செய்யுமாறு தெரிவித்துள்ளார்.

அரசியல் ரீதியில் அவர்கள் குறித்த கொள்கையில் செயல்படுகின்றனர். அதாவது தலதா மாளிகைக்கு குண்டு வைத்தவர்கள், மக்கள் அதிகமாக நடமாடும் இடங்களில் குண்டு வைத்தவர்கள், அரசியல் படுகொலைகளில் குற்றவாளிகளாக காணப்பட்டவர்களை விடுவிப்பது இல்லை என முடிவு அவர்களிடம் காணப்பட்டது. எனினும், அவர்கள் நீண்டகாலம் சிறையில் இருந்திருக்கின்றனர் என்ற அடிப்படையில் அதனை மறுபரிசீலனை செய்வது என தெரிவித்துள்ளனர்.

**சம்பந்தனின் இடம்**

திருகோணமலையில் ஏற்பட்டுள்ள பலவித சிக்கல்களை கையாள்வதற்கு ஒரு பொறிமுறை அவசியம் என்ற அடிப்படையில் சம்பந்தன் எம். பியுடன் பேச்சு இடம்பெற்றது.

நானும் மாவை சேனாதிராசாவும் சம்பந்தரை சந்தித்து கலந்துரையாடினோம். அவர் அதனை வேறு விதத்தில் கையாள்வதாக கூறியிருக்கின்றார். எனவே அந்த விடயங்கள் கையாளப்படும் என நம்புகின்றோம் - என்றார். (ஐ)

## அரசுடனான....

மித்து இந்த கருத்தை வலியுறுத்த வேண்டும் என்று அழைப்பு விடுத்துள்ளார் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினரான க. வி. விக்னேஸ்வரன்.

இனப் பிரச்னைக்கான தீர்வு தொடர்பில் பேசுவதற்கு கடந்த நவம்பர் 23ஆம் திகதி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அழைப்பு விடுத்தார். இதற்கான முதல் சந்திப்பு நாளை செவ்வாய்க்கிழமை நடக்கிறது. இந்தப் பேச்சில் பங்கேற்க 7 தமிழ் கட்சிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளன. இந்நிலையில், விக்னேஸ்வரன் நேற்று அறிக்கை ஒன்றை வெளியிட்டார்.

அதில், அவர் தெரிவித்தவை வருமாறு,

தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினை பற்றி கலந்துரையாடுவதற்காக நாளை செவ்வாய்க்கிழமை சந்திப்பு ஒன்றுக்கு ஜனாதிபதி அழைப்பு விடுத்துள்ளார்.

ஒற்றை ஆட்சியின் கீழான எந்த ஒரு தீர்வும் அர்த்தமுள்ள ஒரு தீர்வாக அமையாது என்பதே எமது கட்சியின் நிலைப்பாடாகும். ஏற்கனவே அரசமைப்பில் இருக்கின்ற 13ஆவது திருத்த சட்டத்தை முழுமையாக அமுல்படுத்த முடியாத நிலையில் இருக்கும் ஜனாதிபதி, அதிகாரப் பகிர்வு தொடர்பில் இந்த நாட்டில் நிரந்தர அமைதி மற்றும் ஸ்திரத்தன்மை ஆகியவற்றை ஏற்படுத்தும் வகையில் துணிச்சலானதும் சரியானதுமான ஓர் அணுகுமுறையை கையாள்வாரா என்பதில் எனக்கு நம்பிக்கை இல்லாத நிலையே இருக்கின்றது.

ஆனால், எது எவ்வாறாக இருந்தாலும், பேச்சுகளுக்கான ஒரு முன்னோடியாக நாளை நடக்கவுள்ள பேச்சில் கலந்து கொள்வதும், இந்த பேச்சில் பின்வரும் சில அடிப்படையான விடயங்களை வலியுறுத்துவதும் அவசியம் என்று கருதுகின்றேன்.

அர்த்தமுள்ள ஓர் அதிகாரப் பகிர்வுக்கான பேச்சை (ஐக்கிய இலங்கைக்குள் சமஷ்டி அல்லது கூட்டு சமஷ்டி என்பதே எமது நிலைப்பாடு) நாம் வரவேற்கின்றோம், பேச்சுக்காக 3ஆம் தரப்பு மத்தியஸ்தம் அவசியம் என்பதை கடந்த கால வரலாறு உணர்த்துகின்றது, மத்தியஸ்தம் வகிப்பதற்கு இந்தியாவுக்கு அழைப்பு விடுவிக்கப்பட வேண்டும், பேச்சு ஒரு கால வரையறைக்குள் பேசி முடிக்கப்பட வேண்டும்.

பேச்சுக்கு முன்னதாக கடினமான நிபந்தனைகளை முன்வைத்து ஜனாதிபதியின் அழைப்பை நாம் கண்மூடித்தனமாக புறக்கணிப்பது பொறுப்புள்ள ஒரு செயலாக அமையாது. அத்தகைய செயல்பாடு எமக்கான சர்வதேச ஆதரவையும் பெற்றுத்தராது. ஆனால், தீர்வு தொடர்பில் ஜனாதிபதி உண்மையான அக்கறையுடன் இருப்பாரானால், இந்திய மத்தியஸ்தத்துடன் பேச்சை ஆரம்பிப்பதற்கு அவர் இணங்கவேண்டும். இதனை நான் நாளைய சந்திப்பில் வலியுறுத்துவேன். இந்த பேச்சில் ஏனைய எல்லா தமிழ் அரசியல் கட்சிகளும் ஒருமித்து இந்த கருத்தை வலியுறுத்த வேண்டும் என்பது எனது எதிர்பார்ப்பு - என்றுள்ளது. (ஐ)

## பாலியல்....

தேடப்பட்ட சொற்களின் விவரத்தை அந்த நிறுவனம் தரவாக வெளியிட்டுள்ளது.

இதில், பாலியல் சார்ந்த சொற்களின் தேடலில் இலங்கை இந்த ஆண்டும் முதலிடத்தைப் பிடித்துள்ளது. 2012ஆம் ஆண்டு முதல் தொடர்ச்சியாக இலங்கை முதலிடத்தைப் பிடித்து வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தத் தரவு பட்டியலில் இரண்டாவது இடத்தில் வியட்நாமும், மூன்றாவது இடத்தில் பங்களாதேஷும் இடம்பெற்றுள்ளன.

தொடர்ந்து இலங்கையில், பாலியல் சார்ந்த சொல் தேடலில் வட மத்திய மாகாணம் முதலிடத்தைப் பிடித்துள்ளது. அத்துடன், வடக்கு மகாணம் இரண்டாம் இடத்தையும், கிழக்கு மாகாணம் நான்காவது இடத்தையும் பிடித்துள்ளன. (ஐ)

## முதலாவது....

கும் என்று தெரிய வருகின்றது. தமிழ், முஸ்லிம் கட்சிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்ட இந்த சந்திப்பு ஜனாதிபதி செயலகத்தில் நாளை செவ் வாய்க்கிழமை மாலை 5.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இதன்படி, இரா. சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ரவூப் ஹக்கீம் தலைமையிலான சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ், ரிஷாத் பதியுதீன் தலைமையிலான அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், மனோ கணேசன் தலைமையிலான தமிழ் முற்போக்குக் கூட்டணி, செந்தில் தொண்டைமான் தலைமையிலான இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி, சி. வி. விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி மற்றும் சிவநேசதுரை சந்திரகாந்தன் தலைமையிலான தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி உள்ளிட்ட கட்சிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்தக் கலந்துரையாடலில் பங்கேற்க வருமாறு பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சிங்கள கட்சிகளுக்கும் ஜனாதிபதி அழைப்பு விடுத்துள்ளார்.

ஒற்றையாட்சியை கைவிட்டு சமஷ்டி அடிப்படையில் பேச்சு நடத்துவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உறுதியளிக்காமல் இந்தக் கலந்துரையாடலுக்குத் தமது கட்சி செல்லாது என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் செல்வராசா கஜேந்திரன் தெரிவித்துள்ளார். (ஐ)

## பிற்போட....

டிருந்தது.

இந்தக் குழுவுக்கு ஆலோசனை வழங்கிய சட்ட அறிஞர்கள் "உள்ளூராட்சி சபை தேர்தல் விடயத்தில் சட்ட ரீதியாக தலையிட முடியாது - அதாவது ஒத்தி வைக்க முடியாது", என்ற சாரப்பட ஆலோசனை வழங்கியுள்ளனர்.

ஆனால், எல்லை நிர்ணய சட்ட மூலத்தை பாராளுமன்றத்தில் கொண்டு வருவதன் மூலம் தேர்தலை அதிகபட்சமாக ஆறு மாதங்களுக்கு ஒத்திவைக்க முடியும் என்று ஆலோசனை வழங்கியுள்ளனர். இதன்படி, தேர்தலை ஒத்திவைக்க அரசாங்கத்துக்கு எஞ்சியிருக்கும் ஒரே தெரிவு இதுவே என்றும் தெரிவிக்கப்பட்டது என்று அறிய வருகினறது. (ஐ -சி)

## உள்ளூராட்சி சபை....

கின்ற போதிலும், அந்தக் கட்சிக்கும் ஐக்கிய மக்கள் சக்திக்கும் இடையே இருக்கும் மிகப்பெரிய இடைவெளியே ஜே. வி. பியின் இந்த முடிவுக்குக் காரணம் என்று கூறப்படுகின்றது.

இதனால், ஜே. வி. பி. உள்ளூராட்சி சபைத் தேர்தலை விட பொதுத் தேர்தலை நடத்த வேண்டும் என்பதையே விரும்புகிறது. எனவேதான், உள்ளூராட்சி சபை தேர்தலை நடத்துமாறு அந்தக் கட்சி அரசாங்கத்தை அழுத்தவில்லை என்று விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

எனினும், உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்த வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியும், அரசாங்கத்திலிருந்து விலகி சுயாதீனமாக இயங்கும் டலஸ் அழகப்பெரும தலைமையிலான குழுவும் வலியுறுத்துகின்றன. இதற்கு மாறாக, தேர்தலை நடத்துவது இல்லை என்ற நிலையில், அரசாங்கம் பொதுஜன பெரமுன, ஜே. வி. பி. ஆகிய தரப்புகள் உள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-சி)

## புலிகள்....

மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்.

இனப் பிரச்னைக்கு தீர்வு காண்பது தொடர்பில் தமிழ் கட்சிகளுக்கு ஜனாதிபதி விடுத்த அழைப்பு தொடர்பாக நேற்று செய்தியாளர்களை சந்தித்தபோதே கஜேந்திரகுமார் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

தமிழீழ விடுதலைப் புலிகள் பலமுறை இலங்கை பொருளாதாரத்தை குறிவைத்து தாக்குதல் நடத்தினார்கள். பொருளாதார நெருக்கடி ஏற்பட்டால், அரசாங்கம் இனப் பிரச்னை தீர்வுக்கு முயற்சிக்கும் என்பதால் புலிகள் அப்படி செயல்பட்டார்கள்.

புலிகள் எதை குறிவைத்து தாக்குதல்கள் நடத்தினார்களோ, அது இப்போது தான் நடந்துள்ளது. இந்த சமயத்தில் தமிழ் மக்கள் தமது முக்கியத்துவத்தை புரிந்து கொண்டு செயல்பட வேண்டும்.

பேச்சு ஆக்கபூர்வமாக இருந்தால், சமஷ்டி அடிப்படையிலான தீர்வை பற்றி ஜனாதிபதி சிங்கள மக்களிடம் பகிரங்கமாகப் பேச வேண்டும். அப்படி நடக்காத பட்சத்தில் தமிழ் மக்கள் மீண்டும் ஏமாற்றப்படுவார்கள்.

இந்த சந்தர்ப்பத்தை தவறவிட்டால் தமிழ் மக்களின் இனப்பிரச்னை ஓர் எல்லையை தாண்டி, எட்ட முடியாத இடத்திற்கு கொண்டு செல்லப்படும் அபாயமுள்ளது. ரணிலின் அழைப்பை ஏற்று, நிபந்தனையின்றி பேச்சில் கலந்து கொண்ட தரப்புகள்தான் அதற்கு பொறுப்பேற்க வேண்டும் - என்றார். (ஐ)

## பாடசாலைகள்....

கிழமை அனைத்து அரச மற்றும் அரச அனுசரணை பெற்ற பாடசாலைகளுக்கும் விடுமுறை வழங்கப்பட்டது.

இந்தநிலையில், நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலையால் இன்றும் பாடசாலைகளுக்கு விடுமுறை என்று கூறப்பட்டது. இது தொடர்பில் கல்வி அமைச்சும் உடனடியாக அறிவிக்கவில்லை.

இந்நிலையில், நேற்று மாலை அனைத்து பாடசாலைகளும் இன்று திங்கட்கிழமை வழமைக்கு திரும்பும் என்று கல்வி அமைச்சு அறிவித்தது. (ஐ)

## ஒற்றையாட்சிக்....

சக்தியின் வருடாந்த மாநாடு நேற்று கொழும்பு - கெம்பல் மைதானத்தில் நடைபெற்றது. இதில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

கோட்டா கோ ஹோம், பஸில் கோ ஹோம் என்ற பெரிய புரட்சியை ஐக்கிய மக்கள் சக்தி செய்தது. குறுகிய காலத்துக்குள் பதிவு செய்யப்பட்டுக் கடந்த பொதுத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்திக்கு பெரு வெற்றி கிடைத்தது.

இவ்வாறான நிலையில் ஐக்கிய மக்கள் சக்தியை அழிக்க கோழைகள் சதி செய்கிறார்கள். ரணசிங்க பிரேமதாஸவின் மகனான சஜித் பிரேமதாஸ இருக்கும் வரையில் ஐக்கிய மக்கள் சக்தி மீது கைவைக்க எவருக்கும் இடமளிக்கமாட்டேன் - என்றார். (ஐ)

## யாழ்ப்பாணம்....

வன்சேகர தெரிவித்தார்.

2019ஆம் ஆண்டு சென்னை - யாழ்ப்பாணம் இடையிலான விமான சேவைகள் ஆரம்பிக்கப்பட்டது. எனினும், கொரோனா பெருந்தொற்று பரவலை தொடர்ந்து இந்த விமான சேவைகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டன.

இந்நிலையிலேயே, இன்று திங்கட்கிழமை சென்னை விமான நிலையத்திலிருந்து அலையன்ஸ் எயார் நிறுவனத்துக்கு சொந்தமான விமானம் முற்பகல் 10:50 மணியளவில் யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தை வந்தடையும் சுமார் ஒரு மணி நேரத்தின் பின்னர் - முற்பகல் 11:50 மணிக்கு சென்னைக்கு புறப்படும். இந்த விமான சேவைகள் திங்கள், செவ்வாய், வியாழன் மற்றும் சனிக்கிழமைகளில் இதேநேரத்தில் இடம்பெறும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, நேற்று நல்லூர் துர்காமணிமண்டபத்தில் நடைபெற்ற பாரதியாரின் 140ஆவது பிறந்தநாள் கொண்டாட்ட விழாவில் உரையாற்றிய யாழ்ப்பாணத்துக்கான இந்தியத் துணைத் தூதுவர் ராகேஸ் நட்ராஜ் ஜெயபாஸ்கர், யாழ்ப்பாணம் - சென்னை விமான சேவை இன்று முதல் ஆரம்பமாகிறது என்று தெரிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

மட்டு. ஈழநாடு
Eelanadu

49/D/2, மாமாங்கம் கோவில் வீதி,
மாமாங்கம், மட்டக்களப்பு
தொ.பே.: 065 2052 955



## பாகிஸ்தானைவிட 281 ஓட்டங்கள் முன்னிலை பெற்றது இங்கிலாந்து

லாகூர், டிசெ. 12

பாகிஸ்தானுக்கு எதிரான 2ஆவது டெஸ்டில் விளையாடி வரும் இங்கிலாந்து இரண்டாவது இனிங்ஸில் 281 ஓட்டங்கள் முன்னிலையில் இருக்கிறது.

முன்னதாக, கடந்த வெள்ளிக்கிழமை தொடங்கிய ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து 51.4 ஓவர்களில் 281 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது. பின்னர் தனது இனிங்ஸை தொடங்கிய பாகிஸ்தான் முதல் நாள் முடிவில் 2 விக்கெட்கள் இழப்புக்கு 107 ஓட்டங்கள் சேர்த்திருந்தது.

இந்நிலையில், சனிக்கிழமை ஆட்டத்தை பாபர் அஸாம், சௌத் ஷகீல் தொடர்ந்தனர். இதில் அஸாம் 75, ஷகீல் 63 ஓட்டங்களுக்கு வெளியேறினர். பின்னர் முகமது ரிஸ்வான் 10, அகா சல்மான் 4, முகமது நவாஸ் 1, பஹீம் அஷ்ரப் 22 ஓட்டங்களுக்கும் முகமது அலி, ஜாஹித் மஹ்முத் ஆகியோர் ஓட்டம் எதையும் பெறாமலும் விக்கெட்டை பறிகொடுத்தனர்.

இதனால் 62.5 ஓவர்களில் 202 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது பாகிஸ்தான். இங்கிலாந்தின் பந்துவீச்சில் ஜேக் லீச் 4, மார்க் வூட், ஜோ ரூட் ஆகியோர் தலா 2, ஜேம்ஸ் அண்டர்சன், அலி ரொபின்சன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை சாய்த்தனர்.

பின்னர் முதல் இனிங்ஸில் 79 ஓட்டங்கள் முன்னிலையுடன் 2ஆஆவது இனிங்ஸை தொடங்கிய இங்கிலாந்து, சனிக்கிழமை முடிவில் 5 விக்கெட்கள் இழப்புக்கு 202 ஓட்டங்கள் எடுத்திருந்தது. ஹாரி புரூக் 74, அணித் தலைவர் பென் ஸ்டோக்ஸ் 16 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் உள்ளனர்.

முன்னதாக ஜாக் கிராவ்லி 3, பென் டக்கெட் 79, வில் ஜேக்ஸ் 4, ஜோ ரூட் 21, ஒல்லி போப் 4 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்திருந்தனர்.

பாகிஸ்தான் தரப்பில் அப்ரார் அகமது 3 விக்கெட்களை சாய்த்துள்ளார். (ஐ)

உலகக் கிண்ண உதைபந்தாட்டம்

## இங்கிலாந்தை வீழ்த்தி அரையிறுதியில் பிரான்ஸ்!



டோஹா, டிசெ. 12

பிபா உலகக் கிண்ண உதைபந்தாட்டத் தொடரில் நடப்பு சாம்பியனான பிரான்ஸ் அணி 7ஆவது தடவையாக அரையிறுதிக்கு தகுதிபெற்றுள்ளது.

கட்டார் உலகக் கிண்ண உதைபந்தாட்டத் நேற்று நள்ளிரவு அல் பேத் மைதானத்தில் நடைபெற்ற காலிறுதிப் போட்டியில் நடப்பு சம்பியனான பிரான்ஸ் அணி, இங்கிலாந்தை எதிர்த்து விளையாடியது.

உலகக் கிண்ண வரலாற்றில் பிரேசில் அணி 1962ஆம் ஆண்டு சாம்பியன் பட்ட அந்தஸ்துடன் களமிறங்கி கிண்ணத்தை மீண்டும் வென்றது. இந்த சாதனையை இதுவரை எந்த அணியும் தகர்க்கவில்லை. இம்முறை கட்டாரில் இந்த சாதனையை முறியடிக்கும் முயற்சியாக பிரான்ஸ் அணி அரையிறுதிக்கு தகுதி பெறும் முனைப்பில் களத்தில் ஆக்ரோஷம் காட்டியது.

அதற்கேற்ப அந்த அணியின் வீரர் அவுரெலியன் ஹோமேனி, ஆட்டத்தின் 16வது நிமிடத்தில் கோல் அடித்து அணியை முன்னிலை பெறவைத்தார். தொடர்ந்து பிரான்ஸுக்கு பதிலடி கொடுக்க இங்கிலாந்தின் ஹாரி கேன், லுக் ஷா போன்றோர்கள் முயன்றனர். ஹாரி கேனின் முயற்சி ஆட்டத்தின் 53ஆவது நிமிடத்தில் கைகொடுக்க இரு அணிகளும் 1 - 1 என்ற கணக்கில் சமநிலை வகித்தன.

ஆனால், பிரான்ஸ் வீரர் ஆலிவர் ஜிரோட் ஆட்டத்தின் 77வது நிமிடத்தில் தலையால் முட்டி கோல் அடித்து மீண்டும் ஆட்டத்தைத் தங்கள் அணியின் பக்கம் திருப்பினார். அவரின் அற்புதமான ஆட்டத்தால் பிரான்ஸ் அணி 2- 1 என்ற கணக்கில் இங்கிலாந்து அணியை வீழ்த்தி மீண்டும் உலகக்கிண்ண அரையிறுதிக்கு தகுதி பெற்றது. (ஐ)

## ஒரே போட்டியில் 18 மஞ்சள் அட்டை!




டோஹா, டிசெ. 12

கட்டார் 2022 உலகக்கிண்ண உதைபந்தாட்டத்தில் ஆர்ஜென்ரீனா - நெதர்லாந்து அணிகளுக்கு இடையிலான காலிறுதிப் போட்டியில் மஞ்சள் அட்டைகளால் புதிய சாதனை படைக்கப்பட்டது.

நேற்றுமுன்தினம் நடந்த இந்தப் போட்டியில், 18 மஞ்சள் அட்டைகள் காட்டப்பட்டன. ஆர்ஜென்ரீனாவின் 8 வீரர்களுக்கும் அவ்வணியின் பயிற்றுநர் லயனல் ஸ்காலோனி உதவிப் பயிற்றுநர் ஆகியோருக்குமாக 10 மஞ்சள் அட்டைகள் காட்டப்பட்டன.

இதேவேளை நெதர்லாந்து குழாமில் 7 பேருக்கு மஞ்சள் அட்டை காட்டப்பட்டது. அவர்களில் டென்ஸில் டம்பிரீஸக்கு 2 மஞ்சள் அட்டைகள் காட்டப்பட்டதையடுத்து, சிவப்பு அட்டையும் காண்பிக்கப்பட்டது.

ஸ்பானிய மத்தியஸ்தர் அன்டோனியோ மெத்தேயு லாஹோஸினால் இந்த மஞ்சள் அட்டைகளும் சிவப்பு அட்டையும் காண்பிக்கப்பட்டன.

உலகக் கிண்ணப் போட்டியொன்றில் 18 மஞ்சள் அட்டைகள் காட்டப்பட்டமை புதிய சாதனையாகும். இதற்கு முன்னர், 2006 ஆம் ஆண்டு போர்த்துகல், நெதர்லாந்து அணிகளுக்கு இடையிலான போட்டியின் போது 16 மஞ்சள் அட்டைகள் காண்பிக்கப்பட்டமையே சாதனையாக இருந்தது. அந்தப் போட்டியில் 4 சிவப்பு அட்டைகளும் காண்பிக்கப்பட்டன.

இந்தப் போட்டியில் ஆர்ஜென்ரீனா 4 - 2 என்ற கோல் கணக்கில் சமநிலை தவிரப்பு உதை மூலம் வெற்றி பெற்றது.

இதேவேளை, 5 தடவைகள் உலக சம்பியனான பிரேஸிலை, வெள்ளிக்கிழமை நடைபெற்ற முதலாவது கால் இறுதிப் போட்டியில், குரோஷியா பெனால்டி முறையில் 3:2 கோல் விகிதத்தில் வென்றன.

குரோஷியாவும் ஆர்ஜென்டீனாவும் நாளை அரையிறுதிப் போட்டியில் மோதவுள்ளன. (ஐ)

## மேற்கிந்தியத் தீவுகள் அணியை 419 ஓட்டங்களால் வென்றது ஆஸி.!



அடிலெய்ட், டிசெ. 12

மேற்கிந்தியத் தீவுகளுடனான இரண்டாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் அவுஸ்திரேலியஅணி 419 ஓட்டங்களால் வெற்றியீட்டியது.

இந்தப் போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் அணி தனது 2ஆவது இன்ங்ஸில் 77 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது.

இந்த வெற்றியின் மூலம் டெஸ்ட் தொடரையும் அவுஸ்திரேலியா கைப்பற்றியது

அவுஸ்திரேலியாவின் அடிலெயட் நகரில் நடைபெற்ற இப்போட்டியில் அவுஸ்திரேலியா முதல் இனிங்ஸில் 7 விக்கெட்கள் இழப்புக்கு 511 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் துடுப்பாட்டத்தை நிறுத்தியது.

மேற்கிந்தியத் தீவுகள் அணி முதல் இனிங்ஸில் 214 ஓட்டங்களைப் பெற்றது.

அவுஸ்திரேலிய அணி 2 ஆவது இன்னிங்ஸில் 6 விக்கெட் இழப்புக்கு 199 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டத்தை நிறுத்திக்கொண்டது.

இதன்படி, மேற்கிந்தியத்தீவுகள் அணி வெற்றி பெறுவதற்கு இரண்டாவது இனிங்ஸில் 497 ஓட்டங்கள் இலக்காக நிர்ணயிக்கப்பட்டது. ஆனால், அந்த அணி 77 ஓட்டங்களுடன் சகல விக்கெட்களையும் இழந்தது.

இது அவுஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் இனிங்ஸ் ஒன்றில் மேற்கிந்தியத் தீவுகள் அணி பெற்ற 2ஆவது ஆகக்குறைந்த ஓட்ட எண்ணிக்கையாகும். மேற்கிந்தியத் தீவுகள் அணி சார்பில் ஆகக்கூடுதலாக சந்தர்போல் 17 ஓட்டங்களைப் பெற்றார்.

அவுஸ்திரேலிய பந்துவீச்சாளர்களில் ஸ்கொட் போலன்ட் 16 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்களையும் மைக்கல் நேசர் 22 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்களையும் மிட்செல் ஸ்டார்க் 29 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்களையும் வீழ்த்தினர்.

நதன் லியோன் 8 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டை வீழ்த்தினார். இது டெஸ்ட் போட்டிகளில் அவர் வீழ்த்திய 450ஆவது விக்கெட் ஆகும். ஷேன் வோர்ண், கிளென் மக்ராத் ஆகியோருக்கு அடுத்ததாக இந்த மைல் கல்லை அடைந்த 3ஆவது அவுஸ்திரேலிய வீரர் நதன் லியோன் ஆவார்.

இப்போட்டியில் அவுஸ்திரேலியா பெற்ற 419 ஓட்ட வெற்றி, மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு எதிரான அவுஸ்திரேலியாவின் மிகப் பெரிய டெஸ்ட் வெற்றியாகும்.

2 போட்டிகள் கொண்ட இந்தத் தொடரில் அவுஸ்திரேலியா 2:0 விகிதத்தில் வெற்றியீட்டியுள்ளது. 2ஆவது போட்டியின் ஆட்டநாயகனாக ட்ராவிஸ் ஹெட் தெரிவானார். தொடரின் நாயகனாக மார்னஸ் லபுஷேன் தெரிவானார். (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 12.12.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.